www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல் 93 | தை - மாசி 2000 | அன்பளிப்பு 5/=

உள்ளே


- தெளிவான அரசியல்களம்
- தமிழ்மக்கள் தமது நீண்ட மௌனத்தைக் கலைத்து
- ஓயாத அலைகள் -3 வடபோர்முனை
- சிங்கத்தின் குகையில் அரசோச்சிய புலிக்குரல்
- சந்திரிகாவிற்கு ஒரு பகிரங்கக் கடிதம்
- விரவிருட்சத்தின் வித்துக்கள்
- கரும்புலி மேஜர் ஆதித்தன்
- உலைக்களம்.


# அடுத்தது என்ன?

## போர் தொடருமா! சமாதானம் பிறக்குமா!

ஓயாதஅலைகள்-3 படைநடவடிக்கைமூலம் புலிகள் இயக்கத்தின் இராணுவஆற்றல் வெளிப்படுத்தப்பட்டபின்னர் சிங்களத்து அரசியற்களம் எவ்வாறுள்ளது!

படையினரின் இராணுவ இயலாமையை புரிந்துகொண்டு சமாதானவழியில் இனச்சிக்கலுக்குத் தீர்வுதேட சந்திரிகா அரசாங்கம் முனையுமா!

அல்லது

புலிகளுடன் தொடர்ச்சியாகப் போரிடுவது என்ற அம்மையாரின் தேர்தல் வாக்குறுதியின் பிரகாரம் போர் தொடருமா!

மீண்டும் ஜனாதிபதியாக அம்மையார் பதவியேற்று இரண்டு மாதங்கள் கடந்து விட்டன.

சமாதான சூழலை ஏற்படுத்துவதற்கு அவரது அரசாங்கம் சமிக்கைகளைக் காட்டியுள்ளதா!

இல்லை..... ஆக்கபூர்வமாக எந்தவொரு சைகையும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஏற்கெனவே இயற்கைமரணம் அடைந்துவிட்ட ''சமாதானப் பொதி'' யை தமிழ்க்குழுக்களின் முன்னிலையில் வைத்து சந்திரிகா அரசாங்கம் பிணப்பரிசோதனை செய்கின்றது. தமிழினத்தின் எதிரிகளும் - துரோகிகளும் இணைந்து ஆடும் இந்தஅரசியல் நாடகத்தை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என எவரும் ஏற்கமாட்டார்.

இதேசமயம், நோர்வே அரசாங்கத்தின் முன்முயற்சியால் இலங்கைத்தீவில் சமாதானம் பிறக்குமாம் என்ற அங்கலாய்ப்பும் பரவலாக உள்ளது.

சமாதானவழியில் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணச் சந்தர்ப்பம் கிடைத்தால் புலிகள் இயக்கம் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்கும்.

ஆனால், இனப்பிரச்சனைக்குத் தீர்வாக புலிகள் இயக்கம் முன்வைத்த அரசியல் நிலைப்பாடுகளை( மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவம் - திம்புக் கோட்பாடுகள்) சிங்கள அரசாங்கம் முழுமையாக நிராகரித்து விட்டது.

இந்தநிலையில் நோர்வே அரசாங்கத்தின் முன்முயற்சிக்கு சிறிலங்கா அரசு ஒத்துழைக்கும் என எதிர்பார்க்கமுடியாது.

எனவே சந்திரிகா அரசாங்கம் சமாதானக்கதவைத் திறந்து நேர்மையாகவும் - நியாயமாகவும் பேச்சுக்களை நடாத்த முன்வரும் எனஎதிர்பார்ப்பது மடைமைத்தனம்.

அப்படியாயின், போரைத் தொடர்ந்துநடாத்தும் திடசங்கற்பத்துடன், சந்திரிகா அரசாங்கம், திட்டங்களைத் தீட்டியுள்ளதா!

ஆம்.. தீட்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஆரம்பித்து விட்டது.

- ☆ பதினையாயிரம் பேரை - இரண்டுமாதத்திற்குள் - படையில் இணைக்க சிங்கள அரசாங்கம் முயல்கின்றது.
- ☆ கடலிலும் - வானிலும் ஆதிக்கம் செலுத்தும் இராணுவ ஆசையுடன் ஆயுததளபாடங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. சில கடற்கப்பல்களையும் - வானூர்திகளையும் வாங்கிவிட்டது.
- ☆ தரைப்படையின் சுடுவலுவை அதிகரிப்பதற்காகவும் -புலிப்படையின் சுடுவலுவை தணிக்கும் எண்ணத்துடனும் புதிதாக ஆட்டிலறிகளை - டாங்கிகளை மற்றும் நவீன இராணுவ றேடர் உபகரணங்களை சிங்களப்படைகள் பெற்றுக் கொள்கின்றன.

இராணுவரீதியாக இவ்விதம் ஆட்பலத்தையும் - ஆயுதபலத்தையும் பெருக்கிக்கொள்ளமுயலும் அதேவேளை, அரசியல் ரீதியாகவும் போருக்கு உரம் சேர்க்கும் வகையில் தனது நிலைப்பாடுகளை அம்மையார் அறிவித்து வருகின்றார்.

'பௌத்த சாசனத்தைப் ( அரசியல் அமைப்பு ரீதியாக ) பாதுகாப்பேன்' என சிங்களவருக்கு அம்மையார் உறுதியளித்துள்ளார். தமிழ் - முஸ்லிம் மக்களின் ஜனாதிபதி தான்தான் என அம்மையார் கூறிக்கொண்டாலும் உண்மையில் அவர் சிங்களவர்களால் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள - பௌத்த ஜனாதிபதி என்பதை அவரின் செயல்கள் காட்டுகின்றன.

பௌத்த சாசனத்தின் முக்கிய பணி இலங்கைத்தீவின் அரசியலில் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை பேணுவதேயாகும்.

இலங்கைத்தீவானது கௌதம புத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் என்பது சிங்கள - பௌத்தத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கை. இந்தப் புனித நிலத்தில் மற்றைய மதங்களுக்கோ - மனிதர்களுக்கோ இடமில்லை. இது சிங்கள - பௌத்தர்களுக்குச் சொந்தமான →

### புத்தாயிரத்தின் பொற்கதிர்கள்



சூரியதேவன் சுட்டு விரற்திசையில்
சுட்டும் விழிச்சுடர்
பட்டுத் துலங்குது
சோதிமிகு தமிழீழம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# தெளிவான அரசியல்களம்

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவியேற்றுள்ளார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு போர்மூலமா! சமாதானம் வாயிலாகவா! என்பதே இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் கருப்பொருள்.

அம்மையாரின் போர்க்கோசத்திற்கு அனுசரணையாக வாக்களித்த சிங்களமக்கள் அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

இதுகாரணமாக இனிவரும் ஆறு - ஏழு ஆண்டுகளை - சந்திரிகா அரசாங்கம் - போரைத் தொடர்ந்து நடாத்துவதிலேயே செலவிடப் போகின்றது.

தமிழினத்தை வெற்றிகொண்டு அவர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற பேரினவாத எண்ணம் சிங்களஇனத்தின் சிந்தனைப் பண்பாடாக அவர்களது மனதை ஆழமாக ஊடுருவியுள்ளது.

பல நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட இந்த இனவாத உணர்விற்கு சிங்களத்தின் அரசியல் - சமூக - நிருவாகக் கட்டுமானங்கள் உரமூட்டி - உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க உதவுகின்றன.

வெறித்தனமான இந்த இனமேலாதிக்க உணர்வூட்டல் காரணமாக தமிழர்களுக்கெதிரான போரை சிங்களமக்கள் ஆதரிக்கின்றனர் என்ற அரசியல யதார்த்தத்தை எவரும் மறுக்க முடியாது.

இதேசமயம், இரண்டுபத்தாண்டுகளாக நடைபெறும் இந்த இனப்போர் சிங்களமக்களுக்கும் பலத்த நாசத்தை உண்டுபண்ணிவருகின்றது உயிரழிவு - பொருண்மியச்சிதைவு - சமூகச் சீரழிவு - பீதிநிறைந்த வாழ்க்கை என சிங்களவரின் வாழ்வியல்த்துயரம் வருடாவருடம் அதிகரித்து வருகின்றது.

இது காரணமாக சிங்களமக்கள் போரை விரும்பவில்லை என்ற வாழ்வியல் யதார்த்தமும் சிங்கள தேசத்தில் உள்ளது.

சிங்களமக்களின் இந்தப் 'போர் வெறுப்பு' தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான அரசியல்த் தீர்வை வழங்கவேண்டும் என்ற அரசியல் விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டவில்லை என்ற உண்மையையும குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்விதம் ஆழ்மன உணர்விற்கும் - அன்றாட வாழ்வியல் யதார்த்தத்திற்குமிடையே ஊசலாடும் சிங்களமக்களின் இந்த இரட்டைமனதை தனது அதிகார வெறிக்கு அத்திவாரமாகப் பயன்படுத்துவதில் அம்மையார் குறியாகவுள்ளார்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின்போது சிங்களவரின் வாழ்வியல் அவலத்தைச் சுட்டிக்காட்டி சமாதானத்திற்கென வாக்குப்பிச்சை கேட்டு அதிகாரத்தில் அமர்ந்த அம்மையார், இம்முறை, சிங்களவரின் ஆழ்மனதை வனைந்துள்ள பேரினவாத உணர்வைக் கிழறி வாக்கு வேட்டை நடாத்தி ஆட்சிக்கட்டிலேறியுள்ளார்.

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் - சர்வதேச ஆதரவைத் திரட்டவும் சொல்லளவில் அம்மையார் சமாதானம் பேசினாலும் செயலளவில் அவர் சிங்களஇனத்தின் மேலாதிக்க வெறியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இனவாதத் தலைவராகும்.

☆ 1994 ஜனாதிபதித்தேர்தலில் தமிழரின் வாக்குகளையும் பெற்று அதிகாரத்திற்கு வந்தபின் தமிழினத்துடன போரைத் தொடுத்து, மாபெரும் மக்கள் அவலத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அதை ஒரு பண்டையமன்னர் கால வெற்றிவிழாவாக சிங்களதேசத்தில் கொண்டாடி தனது பேரினவாத உணர்வை அம்மையார் புலப்படுத்தினார்.

☆ சிங்களப்படைகளின் வான் தாக்குதல்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்படும்போது தாக்குதலை மறைத்து -படையினரை நியாயப்படுத்தும் கைங்கரியத்தில் அம்மையாரின் அரசாங்கம் ஈடுபடுவது வழமை.

☆ படையெடுப்புகளால் ஏதிலிகளாகும் தமிழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் எள்ளளவும் அக்கறை காட்டாத அம்மையாரின் அரசாங்கம், சிங்களவர் ஏதிலிகளாகும்போது அனைத்து உதவிகளையும் வழங்கி அரவணைத்துக்கொள்வதும் வழமை.

☆ அனுராதபுரத்தில் ஒரு விழாவில் பேசும்போது "இந்தத்தீவு சிங்களவரின் நிலம், பௌத்தர்களின நாடு" என்றார்.

தென்னாபிரிக்காவில் உரையாற்றும்போது "தமிழர்கள் வந்தேறு குடிகளென்றார்"

☆ அனுராதபுரத்து அரசமரம் தாக்கப்பட்டால் தமிழர்க்கு எதிரான தாக்குதலுக்குத் தான் தலைமை தாக்குவேன் என நடக்காத ஒரு தாக்குதலைக் கற்பனைசெய்து இனவெறிக் கோபத்துடன் அம்மையார், தனது பேரினவாத வெறியை கொட்டித் தீர்த்தார்.

இந்தவகையில், இம்முறை, ஜனாதிபதித் தேர்தலின்போது அந்த இனவாதத் தலைமைப் பாத்திரத்தை அம்மையார் எவ்வித முகமூடியும் இன்றி வெளிப்படையாகவே காட்டிவிட்டார். இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உகந்தவழி இராணுவத்தீர்வுதான் என்ற பச்சைப்பேரினவாத நிலைப்பாட்டை தனது கொள்கைப் பிரகடனமாக முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் வென்று சிங்களப் பேரினவாதத்தின் தலைவராகப் பதவியேற்றுள்ளார்.

இவ்விதம், சந்திரிகா அம்மையார் சிங்களப் பேரினவாதத்தின் தலைவராக இருந்தபடி தமிழினத்துக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார்.

இதேவேளை, தாயகத்தமிழர் மட்டுமல்ல மலையகம் மற்றும் கொழும்பு உட்பட இலங்கை வாழ்தமிழர்கள் அம்மையாரை நிராகரித்து தமது அரசியல் நிலைப்பாட்டை உலக சமூகத்திற்கு தெளிவாகக் காட்டிவிட்டனர்.

இந்த நிராகரிப்பிற்கு பதிலடியாக தமிழரைத் துன்பப்படுத்தும் பணியை அம்மையார் தீவிரப்படுத்தியுள்ளார் தென்னிலங்கையில் கைதுகளும - தமிழர் தாயகம்மீது இராணுவ ஆட்சியை இறுக்கியும், பொருளாதாரத் தடைகளை மேலும் தீவிரப்படுத்தியும் தமிழர் விரோதப்போக்கை நடைமுறைப்படுத்துகின்றார்.

சிங்களமக்கள் தேர்ந்தெடுத்த தம் தலைவரை தமிழ்மக்கள் காட்டமாக நிராகரித்துள்ளதன்மூலம் இத்தீவில் வசிக்கும் இருவேறு தேசிய இனங்களும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளுடன் உள்ளன என்ற உண்மை மீண்டும் ஒரு முறை உலகிற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சனையை இராணுவவழிமுறைகளில் அணுக அம்மையார் திடசங்கற்பம் பூண்டிருந்தாலும் அது அவரின் தலைமையிலான சிங்களப்படைகளால் முடியாத செயல் என்ற உண்மையை ஓயாதஅலைகள் -3 நிரூபித்துவிட்டது.

எனினும், இந்தக் களயதார்த்தத்தை சிங்களப்பேரினவாதம் ஏற்கவிரும்பாது. போரைத் தொடர்ந்து நடாத்தவே அது முயலும். தன் கைகளால் தனது சமாதியைக் கட்டும்வரை அது ஓயாது.

இந்தநிலையில், தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக போருக்கும்- போருக்குள்ளான வாழ்வுக்கும் தங்களை இசைவாக்கிக் கொள்வதைவிட மாற்றுவழிகள் ஏதுமிருக்கப்போவதில்லை.

புலிகள் இயக்கத்தின் படைபலம்தான் தமிழினத்தின் பலம். தமிழ்த்தேசியத்தின் பாதுகாப்புககவசமும் அதுதான். தமிழ்மக்களின் சுதந்திரமான தேசியவாழ்வுக்கும் அதுதான் மூலாதாரம்.

தமிழர்தாயகத்தின் நிலங்கள் மீட்கப்பட மீட்கப்பட அதற்கேற்றாற்போல் தமிழர் சேனையின்படைபலமும் அதிகரித்தபடி வளர வேண்டும். இந்த அரசியல் மந்திரம்தான் தமிழ் மக்களின் சிந்தனையும - செயற்பாடுமாக இருத்தல்வேண்டும்.

o

தீவு என்பதே அவர்களின் அரசியல் நிலைப்பாடு. பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பேன் என்று அம்மையார் உறுதி உரைத்தது. வெறும் மதவிவகாரம் மட்டுமல்ல என்பது இங்கே புலப்படுகின்றது.

இதேசமயம், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்நிலத்திலும், தமிழீழ-சிறிலங்கா எல்லைகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக பல புதிய கெடுபிடிகளை சந்திரிகா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

வன்னிக்கான உணவு - மருந்துப் பொருட்களுடன் மக்களின் பயணப்போக்குவரத்திலும் அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை புதிதாக விதித்துள்ளது.

அத்துடன், வவுனியாவிலிருந்து எல்லை தாண்டி சிறிலங்காவிற்கான பயணத்திற்கும், மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகளிலிருந்து எல்லைதாண்டி கொழும்பு நகர் நோக்கிச்செல்லவும் சிங்கள அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

இவை எல்லாம் போர்ச்சமிக்கைகளே ஆகும். போர்க்கொள்கையை அரசாங்கம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதையே இவை காட்டுகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையைப் புறந்தள்ளியபடி சந்திரிகா அரசாங்கம கடைப்பிடிக்கும் இந்தப் போர்முனைப்பை சர்வதேசம் எவ்வாறு நோக்குகின்றது.

சிங்கள அரசாங்கமும் - அதன் பத்திரிகைகளும் விமர்சிக்கும் அளவிலேயே பிரித்தானியாவின் நிலைப்பாடு உள்ளது. தமிழ்மக்களுக்கு எதிரான மனிதஉரிமை மீறல்களுக்காக பொதுநலவாய அமைப்பில் இருந்து சிறிலங்காவை வெளியேற்றவேண்டும் என பிரித்தானியா கருத்துத் தெரிவித்தது. தனது நாட்டிலிருந்து சிங்கள அரசாங்கத்திற்கு ஆயுதங்கள் விற்கப்படுவதிலும் கட்டுப்பாடுகளை விதித்து தனது அதிருப்தியை பிரித்தானியா வெளிப்படுத்தியுள்ளது. பிரித்தானியா மட்டுமல்ல ஐரோப்பாக்கண்டத்தின் பெரும்பாலான நாடுகளும் சிங்கள அரசாங்கத்தின் போர்வெறியை இனங்காணத் தொடங்கிவிட்டன.

ஆனாலும், அமெரிக்க ஆயுதங்கள் சிங்களப் படையினர்க்கு தொடர்ந்தும் கிடைத்து வருவது சிறிலங்காவின் அரசியல் - இராணுவத் தலைவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கலாம். எனினும் அந்த 'ஆயுதவிற்பனையை' தமிழருடன் சிறிலங்கா அரசாங்கம் நடாத்தும் போருக்கு அமெரிக்காவும் ஆதரவளிக்கின்றது என அர்த்தப்படுத்தக் கூடாது என இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவுக்கான ஆயுதவிற்பனையை அரசியல் ரீதியாக நியாயப்படுத்தமுடியாத அமெரிக்காவின் நெருடல் நிலையையே அமெரிக்கத்தூதரின்கருத்து புலப்படுத்துகின்றது.

எது எப்படி இருப்பினும், போர் மூலம் தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பது என்ற அம்மையாரின் திட்டம் படுதோல்வி அடைந்து விட்டதை சர்வதேசம் கண்டுவிட்டது. இந்த நிலையில், மீண்டும் அம்மையார், போர்க்குரல் எழுப்பி இராணுவ வழிமுறையில் இனப்பிரச்சனையை அணுக எடுத்திருக்கும் முடிவை சர்வதேசம் அங்கீகரிக்கவில்லை. இதனால், எதிர்காலத்தில், போருக்கான நிதியை தேடிப்பெறுவதில் சிங்களம் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் என்பது திண்ணம்.

சந்திரிகா அரசாங்கத்தின் போர்முனைப்புக்கு களயதார்த்தம் கூறும் பதிலென்ன!

சிங்களப்படைகளுக்குச் சாதகமாகக் களநிலமை இல்லை என்று சிங்களஇராணுவ ஆய்வாளர்களே ஒப்புக்கொள்கின்றனர். ஓயாத அலைகள்-3 படைநடவடிக்கையின் போது புலிகள் நடாத்திய மூன்று கட்ட நிலமீட்புத்தாக்குதல்கள்சிங்களப் படைகளுக்குப் பாரிய தோல்விகளைக் கொடுத்துவிட்டன.

நிலம் மீட்கப்பட்ட அம்சத்துடன் - வெற்றிலைக்கேணி வெற்றியுடன் - நீண்டகரையைக் கொண்ட கடற்பரப்பும் மீட்கப்பட்டுள்ளது. இவை தமிழர் விடுதலைப்போரில் ஒரு புதிய இராணுவ யதார்த்தத்தைப் பிறப்பித்துள்ளன.

o





www.eelamview.com

www.eelamview.com



# தெளிவான அரசியல்களம்

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவியேற்றுள்ளார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு போர்மூலமா! சமாதானம் வாயிலாகவா! என்பதே இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் கருப்பொருள்.

அம்மையாரின் போர்க்கோசத்திற்கு அனுசரணையாக வாக்களித்த சிங்கள மக்கள் அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

இது காரணமாக இனிவரும் ஆறு- ஏழு ஆண்டுகளை - சந்திரிகா அரசாங்கம் - போரைத் தொடர்ந்து நடாத்துவதிலேயே செலவிடப் போகின்றது.

தமிழினத்தை வெற்றிகொண்டு அவர்களை அடக்கி ஆழவேண்டும் என்ற பேரினவாத எண்ணம் சிங்களஇனத்தின் சிந்தனைப் பண்பாடாக அவர்களது மனதை ஆழமாக ஊடுருவியுள்ளது.

பல நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட இந்த இனவாத உணர்விற்கு சிங்களத்தின் அரசியல் - சமூக - நிருவாகக் கட்டுமானங்கள் உரமூட்டி - உயிர்த் துடிப்புடன் வைத்திருக்க உதவுகின்றன.

வெறித்தனமான இந்த இனமேலாதிக்க உணர்வூட்டல் காரணமாக தமிழர்களுக்கெதிரான போரை சிங்களமக்கள் ஆதரிக்கின்றனர் என்ற அரசியல யதார்த்தத்தை எவரும் மறுக்க முடியாது.

இதேசமயம், இரண்டுபத்தாண்டுகளாக நடைபெறும் இந்த இனப்போர் சிங்களமக்களுக்கும் பலத்த நாசத்தை உண்டு பண்ணிவருகின்றது உயிரழிவு - பொருண்மியச்சிதைவு - சமூகச் சீரழிவு - பீதிநிறைந்த வாழ்க்கை என சிங்களவரின் வாழ்வியல்த்துயரம் வருடாவருடம் அதிகரித்து வருகின்றது.

இது காரணமாக சிங்களமக்கள் போரை விரும்பவில்லை என்ற வாழ்வியல் யதார்த்தமும் சிங்கள தேசத்தில் உள்ளது.

சிங்களமக்களின் இந்தப் 'போர் வெறுப்பு' தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான அரசியல்த் தீர்வை வழங்கவேண்டும் என்ற அரசியல் விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டவில்லை என்ற உண்மையையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்விதம் ஆழ்மன உணர்விற்கும் - அன்றாட வாழ்வியல் யதார்த்தத்திற்குமிடையே ஊசலாடும் சிங்களமக்களின் இந்த இரட்டைமனதை தனது அதிகார வெறிக்கு அத்திவாரமாகப் பயன்படுத்துவதில் அம்மையார் குறியாகவுள்ளார்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின்போது சிங்களவரின் வாழ்வியல் அவலத்தைச் சுட்டிக்காட்டி சமாதானத்திற்கென வாக்குப்பிச்சை கேட்டு அதிகாரத்தில் அமர்ந்த அம்மையார், இம்முறை, சிங்களவரின் ஆழ்மனதை வனைந்துள்ள பேரினவாத உணர்வைக் கிழறி வாக்கு வேட்டை நடாத்தி ஆட்சிக்கட்டிலேறியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் - சர்வதேச ஆதரவைத் திரட்டவும் சொல்லளவில் அம்மையார் சமாதானம் பேசினாலும் செயலளவில் அவர் சிங்களஇனத்தின் மேலாதிக்க வெறியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இனவாதத் தலைவராகும்.

☆ 1994 ஜனாதிபதித்தேர்தலில் தமிழரின் வாக்குகளையும் பெற்று அதிகாரத்திற்கு வந்தபின் தமிழினத்துடன போரைத் தொடுத்து, மாபெரும் மக்கள் அவலத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அதை ஒரு பண்டையமன்னர் கால வெற்றிவிழாவாக சிங்களதேசத்தில் கொண்டாடி தனது பேரினவாத உணர்வை அம்மையார் புலப்படுத்தினார்.

☆ சிங்களப்படைகளின் வான் தாக்குதல்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்படும்போது தாக்குதலை மறைத்து -படையினரை நியாயப்படுத்தும் கைங்கரியத்தில் அம்மையாரின் அரசாங்கம் ஈடுபடுவது வழமை.

☆ படையெடுப்புகளால் ஏதிலிகளாகும் தமிழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் எள்ளளவும் அக்கறை காட்டாத அம்மையாரின் அரசாங்கம், சிங்களவர் ஏதிலிகளாகும்போது அனைத்து உதவிகளையும் வழங்கி அரவணைத்துக்கொள்வதும் வழமை.

☆ அனுராதபுரத்தில் ஒரு விழாவில் பேசும்போது "இந்தத்தீவு சிங்களவரின் நிலம், பௌத்தர்களின நாடு" என்றார்.

தென்னாபிரிக்காவில் உரையாற்றும்போது "தமிழர்கள் வந்தேறு குடிகளென்றார்"

☆ அனுராதபுரத்து அரசமரம் தாக்கப்பட்டால் தமிழர்க்கு எதிரான தாக்குதலுக்குத் தான் தலைமை தாக்குவேன் என நடக்காத ஒரு தாக்குதலைக் கற்பனைசெய்து இனவெறிக் கோபத்துடன் அம்மையார், தனது பேரினவாத வெறியை கொட்டித் தீர்த்தார்.

இந்தவகையில், இம்முறை, ஜனாதிபதித் தேர்தலின்போது அந்த இனவாதத் தலைமைப் பாத்திரத்தை அம்மையார் எவ்வித முகமூடியும் இன்றி வெளிப்படையாகவே காட்டிவிட்டார். இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உகந்தவழி இராணுவத்தீர்வுதான் என்ற பச்சைப்பேரினவாத நிலைப்பாட்டை தனது கொள்கைப் பிரகடனமாக முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் வென்று சிங்களப் பேரினவாதத்தின் தலைவராகப் பதவியேற்றுள்ளார்.

இவ்விதம், சந்திரிகா அம்மையார் சிங்களப் பேரினவாதத்தின் தலைவராக இருந்தபடி தமிழினத்துக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார்.

இதேவேளை, தாயகத்தமிழர் மட்டுமல்ல மலையகம் மற்றும் கொழும்பு உட்பட இலங்கை வாழ்தமிழர்கள் அம்மையாரை நிராகரித்து தமது அரசியல் நிலைப்பாட்டை உலக சமூகத்திற்கு தெளிவாகக் காட்டிவிட்டனர்.

இந்த நிராகரிப்பிற்கு பதிலடியாக தமிழரைத் துன்பப்படுத்தும் பணியை அம்மையார் தீவிரப்படுத்தியுள்ளார் தென்னிலங்கையில் கைதுகளும - தமிழர் தாயகம்மீது இராணுவ ஆட்சியை இறுக்கியும், பொருளாதாரத் தடைகளை மேலும் தீவிரப்படுத்தியும் தமிழர் விரோதப்போக்கை நடைமுறைப்படுத்துகின்றார்.

சிங்களமக்கள் தேர்ந்தெடுத்த தம் தலைவரை தமிழ்மக்கள் காட்டமாக நிராகரித்துள்ளதன்மூலம் இத்தீவில் வசிக்கும் இருவேறு தேசிய இனங்களும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளுடன் உள்ளன என்ற உண்மை மீண்டும் ஒரு முறை உலகிற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சனையை இராணுவவழிமுறைகளில் அணுக அம்மையார் திடசங்கற்பம் பூண்டிருந்தாலும் அது அவரின் தலைமையிலான சிங்களப்படைகளால் முடியாத செயல் என்ற உண்மையை ஓயாதஅலைகள் -3 நிரூபித்துவிட்டது.

எனினும், இந்தக் களயதார்த்தத்தை சிங்களப்பேரினவாதம் ஏற்கவிரும்பாது. போரைத் தொடர்ந்து நடாத்தவே அது முயலும். தன் கைகளால் தனது சமாதியைக் கட்டும்வரை அது ஓயாது.

இந்தநிலையில், தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக போருக்கும்- போருக்குள்ளான வாழ்வுக்கும் தங்களை இசைவாக்கிக் கொள்வதைவிட மாற்றுவழிகள் ஏதுமிருக்கப்போவதில்லை.

புலிகள் இயக்கத்தின் படைபலம்தான் தமிழினத்தின் பலம். தமிழ்த்தேசியத்தின் பாதுகாப்புக்கவசமும் அதுதான். தமிழ்மக்களின் சுதந்திரமான தேசியவாழ்வுக்கும் அதுதான் மூலாதாரம்.

தமிழர்தாயகத்தின் நிலங்கள் மீட்கப்பட மீட்கப்பட அதற்கேற்றாற்போல் தமிழர் சேனையின்படைபலமும் அதிகரித்தபடி வளரவேண்டும். இந்த அரசியல் மந்திரம்தான் தமிழ் மக்களின் சிந்தனையும் - செயற்பாடுமாக இருத்தல்வேண்டும்.

o

தீவு என்பதே அவர்களின் அரசியல் நிலைப்பாடு. பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பேன் என்று அம்மையார் உறுதி உரைத்தது. வெறும் மதவிவகாரம் மட்டுமல்ல என்பது இங்கே புலப்படுகின்றது.

இதேசமயம், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்நிலத்திலும், தமிழீழ- சிறிலங்கா எல்லைகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக பல புதிய கெடுபிடிகளை சந்திரிகா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

வன்னிக்கான உணவு - மருந்துப் பொருட்களுடன் மக்களின் பயணப்போக்குவரத்திலும் அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை புதிதாக விதித்துள்ளது.

அத்துடன், வவுனியாவிலிருந்து எல்லை தாண்டி சிறிலங்காவிற்கான பயணத்திற்கும், மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகளிலிருந்து எல்லைதாண்டி கொழும்பு நகர் நோக்கிச்செல்லவும் சிங்கள அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

இவை எல்லாம் போர்ச்சமிக்கைகளே ஆகும். போர்க்கொள்கையை அரசாங்கம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதையே இவை காட்டுகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையைப் புறந்தள்ளியபடி சந்திரிகா அரசாங்கம கடைப்பிடிக்கும் இந்தப் போர்முனைப்பை சர்வதேசம் எவ்வாறு நோக்குகின்றது.

சிங்கள அரசாங்கமும் - அதன் பத்திரிகைகளும் விமர்சிக்கும் அளவிலேயே பிரித்தானியாவின் நிலைப்பாடு உள்ளது. தமிழ்மக்களுக்கு எதிரான மனிதஉரிமை மீறல்களுக்காக பொதுநலவாய அமைப்பில் இருந்து சிறிலங்காவை வெளியேற்றவேண்டும் என பிரித்தானியா கருத்துத் தெரிவித்தது. தனது நாட்டிலிருந்து சிங்கள அரசாங்கத்திற்கு ஆயுதங்கள் விற்கப்படுவதிலும் கட்டுப்பாடுகளை விதித்து தனது அதிருப்தியை பிரித்தானியா வெளிப்படுத்தியுள்ளது. பிரித்தானியா மட்டுமல்ல ஐரோப்பாக்கண்டத்தின் பெரும்பாலான நாடுகளும் சிங்கள அரசாங்கத்தின் போர்வெறியை இனங்காணத் தொடங்கிவிட்டன.

ஆனாலும், அமெரிக்க ஆயுதங்கள் சிங்களப் படையினர்க்கு தொடர்ந்தும் கிடைத்து வருவது சிறிலங்காவின் அரசியல் - இராணுவத் தலைவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கலாம். எனினும் அந்த 'ஆயுதவிற்பனையை' தமிழருடன் சிறிலங்கா அரசாங்கம் நடாத்தும் போருக்கு அமெரிக்காவும் ஆதரவளிக்கின்றது என அர்த்தப்படுத்தக் கூடாது என இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவுக்கான ஆயுதவிற்பனையை அரசியல் ரீதியாக நியாயப்படுத்தமுடியாத அமெரிக்காவின் நெருடல் நிலையையே அமெரிக்கத்தூதரின்கருத்து புலப்படுத்துகின்றது.

எது எப்படி இருப்பினும், போர் மூலம் தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பது என்ற அம்மையாரின் திட்டம் படுதோல்வி அடைந்து விட்டதை சர்வதேசம் கண்டுவிட்டது. இந்த நிலையில், மீண்டும் அம்மையார், போர்க்குரல் எழுப்பி இராணுவ வழிமுறையில் இனப்பிரச்சனையை அணுக எடுத்திருக்கும் முடிவை சர்வதேசம் அங்கீகரிக்கவில்லை. இதனால், எதிர்காலத்தில், போருக்கான நிதியை தேடிப் பெறுவதில் சிங்களம் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் என்பது திண்ணம்.

சந்திரிகா அரசாங்கத்தின் போர்முனைப்புக்கு களயதார்த்தம் கூறும் பதிலென்ன!

சிங்களப்படைகளுக்குச் சாதகமாகக் களநிலமை இல்லை என்று சிங்களஇராணுவ ஆய்வாளர்களே ஒப்புக்கொள்கின்றனர். ஓயாத அலைகள்-3 படைநடவடிக்கையின் போது புலிகள் நடாத்திய மூன்று கட்டநிலமீட்புத்தாக்குதல்கள்சிங்களப் படைகளுக்குப் பாரிய தோல்விகளைக் கொடுத்துவிட்டன.

நிலம் மீட்கப்பட்ட அம்சத்துடன் - வெற்றிலைக்கேணி வெற்றியுடன் - நீண்டகரையைக் கொண்ட கடற்பரப்பும் மீட்கப்பட்டுள்ளது. இவை தமிழர் விடுதலைப்போரில் ஒரு புதிய இராணுவ யதார்த்தத்தைப் பிறப்பித்துள்ளன.

o



www.eelamview.com

# ஓயாத அலைகள்-3 வட போர்முனை

அனைத்தும் அந்தரத்தில் சுழல, அடித்துப் போனது புயல்மழையொன்று. ஆண்டாண்டுகளாக உயிரை உருக்கி சேர்த்துவைத்த எல்லாமே அள்ளுண்டு போனது. நாளைய இருப்புங்கூட அப்படியாயிற்று. வெட்டிமுழங்கிய புயல்மழை வேகம் தணிய, இன்னுமிருப்பவர்கள் எழுந்துநின்று எஞ்சியிருப்பவற்றை ஏக்கத்துடன் பார்க்கிறார்கள். நாளை பற்றிய அவர்களின் கேள்வி இருளாகத் தெரியும் கணப்பொழுதது. அப்பொழுதும் அறிவிப்பு வருகிறது. தாழமுக்கம் தணிந்துபோகவில்லையாம், புயல் தொடரும் என்று. தங்கள் இருப்புப் பற்றிய அவர்களின் எண்ணமோ தல்கள் எப்படியிருக்கும்? அப்படித்தானிருந்தது, எம் அழிவில் ஆனந்தங்கொண்டாடிவந்த பகைவர்களுக்கு; ஓயாத அலைகள்-3 கட்டம் ii முடிந்தும் அலைகள் ஓயாத செய்தி கேட்டபொழுது.

எங்கள் தேசத்திற்கும் ஒருகாலம் இப்படித்தானிருந்தது. முன்னேறிப்பாய்ச்சல், பின் சூரியக்கதிர்கள், கிழக்கில் பொங்கும் கடலலைகள், உண்மைவெற்றிகள (சத்ஜெய), எடிபல, வெற்றிஉறுதி, சூரியபலம், போர்முழக்கங்கள், நீர்ப்பிரவாகம் (வோட்டசெற்) என்று நாலாதிசைகளிலும் புயல்கள் வீசின. எங்கள் நிலையும் அதுவாயானது. நாங்களொன்றும் 'பீனிக்ஸ்' பறவையல்ல, இழந்த வாழ்வை மீளப்பெறுவதற்கு இருப்பதை இழக்கத் தயாராகாமல் புயலுக்குள் வாழப்பழகிக்கொண்டதெம் தேசம். உண்மைதான், போர்ப்புயல் வாழ்வில் பழக்கப்படுத்தப்பட்டது. புயல்கள் பற்றிய அச்சம் எமக்கினியில்லை. இழந்ததைப் பெறுவதற்காய் இடியென எழுகிறது புயல்களைத் தாங்கிய தேசம். இதன் பிரவாகத்தில் அனைத்துமே பிய்த்தெறியப்படும். அதன் பெயர் 'ஓயாத அலைகள்-3'.

ஓயாத அலைகள்-3 கட்டம் I, II.இல் ஆண்டுகளாக பகைவர் ஆக்கிரமித்ததையெல்லாம், நாட்கணக்கில் படைத்தளங்களை நசுக்கி நம் தேசத்தை மீட்டெடுத்துக்கொண்டனர் தாய்நாட்டின் புதல்வர்கள். ஆயிரக்கணக்கில் உயிர்களைவிட்டு எம்நிலம் பிடித்தவர்களின் உயிர்களையெடுத்து அவர்தம் நிலம் விரட்டினர் புலிகள். வன்னியின் தென்கள முனையில் மூன்று திக்குகளிலும் மூண்ட போரில் கோட்டையென எழுந்துநின்ற படைத்தளங்கள் சுட்டிச்சுவரென கருகிப்போக. ஓயாத அலைகளின் முடிவுத்தேதிக்காக ஏங்கியிருந்தார்கள், முன்னர் ஒருதேசத்தின் முடிவுத்தேதிக்காக காத்திருந்த அதே மனிதர்கள்.

ஒருகாலம் எங்கள் மரணங்களால் மகிழ்ந்துகழித்தவர்கள் இவர்கள்தான். ஒரு வெடியோசையால் எம் உயிர்களைச் சிதைத்து, உடல்களைச்சிதைத்து, எஞ்சியவரின் மனங்களைச்சிதைத்து, தமிழரின் வாழ்வைச் சிதைத்தவர்களும் இவர்கள்தான். ஒற்றை வெடியோசையில் எத்தனை குழந்தைகள் அநாதைகளாயின! எத்தனை குடும்பங்கள் அநாதரவாயின! அவற்றின் அழுகுரல்களில் ஆனந்தம்கொண்டவர்களும் இவர்கள்தான். எழுகின்ற சூரியனை எங்கள் தேசத்திற்கு மட்டும் மறைத்துவிட முடியாவிட்டாலும், எம்மை இருளிலிருத்த ஏற்பாடு செய்தவர்களுமிவர்கள்தான். இவர்கள்தான் இப்பொழுது தங்கள் மரணங்களுக்காக காத்திருந்தார்கள்; இம்முறை எம்மரணங்கள் நிச்சயமென்றுசொன்ன மேலதிகாரிகளின் வார்த்தைகளில் நம்பிக்கையற்றவர்களாக.

''எங்கள் வருகைக்காக எதிரி காத்திருக்கிறானென்பது எமக்குத் தெரியும். எமது உடல்களை எண்ணிவிட அவனுக்குக் கட்டளை வந்திருப்பதும் தெரியும். இருந்தாலும் இந்த வெற்றிலைக்கேணித் தளத்தை இன்று இரவு தொடங்கும் சமரில் வெற்றிகொள்வோம். இதை வெற்றிகொண்டேயாக வேண்டும்'' என்று பகைத்தளத்தில் பாயப்போகும் புலிகளுக்கு போதித்தார் இச்சமர்முனைத் தளபதி கேணல் கருணா. தலைவர் வழிநடத்தும் ஓயாத அலைகள்-3இன் கட்டம் III இன் தொடக்கம் இதுதான்.

10ஆம் திகதி இருட்பொழுதில் எம் வருகைக்காக காத்திருக்கும் பகைவர்களுக்கு மரணத்தைப் பரிசளிப்பதற்காக புலிகள்சேனை நகர்ந்தது. லெப். கேணல் கெங்கா தலைமையில் அன்பரசி படையணி உட்பட, ஜெயந்தன் படையணி, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் கொண்ட படைத்தொகுதி தளபதி லெப். கேணல் ராபட்டின் வழிநடத்தலில் களமிறங்கியது. இதே நேரம் தளபதி கேணல் சூசையின் கட்டளையின் கீழ் பெருங்கடலிலும், நீரேரியிலும் களம் தொடங்க தாக்குதற் படகுகளோடு தயாராகிக்கொண்டனர் கடற்புலிகள்.

மாரிகாலம் வன்னியில் முடிந்துபோகவில்லை. வானம் இருள்மண்டிக் கிடந்தது. வழமையைவிட கடலலையின் வீச்சம் அதிகமாகவிருந்தது. நீரேரியில் நீர்மட்டம் உயர்ந்திருந்தது. இவையெல்லாம்கூட எதிரி தனக்கான பாதுகாப்பரண்களென்றே எண்ணியிருந்தான். இழந்ததைப் பெற்றுக்கொள்வதற்கான ஆத்மாவின் ஆவல், சுதந்திரத்தின் தேடல் எந்தத் தடையையும் உடைக்காதா என்ன? பகைவர்கள் இதைப் புரிந்துகொள்ளச் சாத்தியமில்லைத்தான். ஏனெனில், இழந்தது அவர்களில்லை; நாங்கள்தான். அதனால் தான் கழுத்தில் சாவைக் கட்டிப் போராடுகின்றோம். விடுதலை உணர்வைவிட ஆக்கிரமிப்பு வெறிக்கு சக்தி அதிகமாயிருப்பின எங்கள் தேசம் அழிந்து நீண்டகாலமாயிருக்கும். விடுதலையை வென்றெடுக்கும்வரை ஓயமாட்டோமென்பதை அவலத்தை எம் தேசத்திற்குப் பரிசளித்த அவர்களுக்கு மீண்டுமொருமுறை உணர்த்த ஓயாத சமர் தொடங்கியது, கட்டம் - III என்று.

கட்டைக்காடு, புல்லாவெளி இராணுவ தளங்களைக் காவலிட்டிருந்த முன்னரங்க காவலரண் தொடரின் நடுப்பகுதியில் முதலுடைப்பு நடந்தது. எதிரி அமைத்த தடைகளை வீரத்தைக்கொண்டு வெட்டியெறிந்தார்கள் புலிவீரர்கள். முடியாதபோது தம்முயிரைக்கொண்டு உடைத்தெறிந்தார்கள். லெப். கேணல் வண்ணக்கிளியின் ஒருங்கிணைப்பில் பீரங்கிப்படையணி 'பற்றிக்' களின் சூட்டாதரவுடன் எதிரியின் காவலரண்களைத் தகர்த்து முன்னேறியது புலிகள்சேனை.

வெற்றிகொள்ளப்பட்ட படைத்தளத்தில் எதிரியுடல்களைக் கடந்து வெற்றிலைக்கேணி பிரதான இராணுவத்தளத்தை நோக்கி முன்னேறியது அப்படைத்தொகுதி. இதனுடன் புதிதாக இணைக்கப்பட்ட கடற்புலிகளின் தாக்குதலணியும் இணைந்து நகர, பெருங்கடலிலும் கடற்புலிகள் தாக்குதற் படகுகளோடு களமிறங்கினர். கடற்புலிகளின் படகுத்தொகுதிகள் இருவேறு இலக்குக்காக நியமிக்கப்பட்டன. லெப். கேணல் அமுதசுரபியின்

## கட்டம் ~ III

தலைமையிலிருந்த கடற்புலி மகளிர் தாக்குதல் படகு உட்பட ஒரு படகுத்தொகுதி லெப். கேணல் ரஞ்சனின் வழிநடத்தலில் இக்கடற்தளத்தின் கரையோரத்திலிருந்த நீண்ட காவலரண் தொடரைத் தாக்குவதற்காகக் களமிறக்கப்பட்டது. அதேநேரம் பெருங்கடலிலிருந்து சிறிலங்கா கடற்படை இத்தளத்தைத் தக்கவைப்பதற்காக எடுக்கப்போகும் முயற்சியை முறியடிப்பதற்கு லெப். கேணல் ராவணனின் தலைமையிலான படகுத் தொகுதியொன்று காவலிட்டு நின்றது. நீரேரியிலும், பெருங்கடலிலும் நடைபெறும் சமர் நடவடிக்கைகளுக்கு தளபதி கேணல் சூசை கட்டளை வழங்கினார்.



ஓயாத அலைகள் - 3 சமர்முனை :- நகர்கிறது புலிகள்சேனை.

திட்டத்தின்படி அப்படைத்தொகுதி இரண்டாகப் பிரிந்து செயற்படத் தொடங்கியது. கட்டைக்காடு பிரதான இராணுவ தளத்தை நோக்கி ஒரு படைத் தொகுதியும், புல்லாவெளி பிரதான இராணுவ தளத்தை நோக்கி மறு படைத்தொகுதியுமாக எதிரிக் காவலரண்களைத் தகர்த்தெறிந்து மினிமுகாங்களை வெற்றிகொண்டு முன்னேறினர் புலிகள். நீரேரியில் எதிரி அமைத்திருந்த காவலரண் தொடரை தகர்த்தழிக்க கடற்புலி லெப். கேணல் மங்கவேலின் தலைமையில் ஒரு படகுத் தொகுதி ஈடுபட்டது. கட்டைக்காடு இராணுவ தளம்வரை முன்னேறிய புலிகள் தளத்தில் எதிரியை நெருங்கித் தாக்கினர். கடற்கரையில் நிமிர்ந்து நின்ற தேவாலயத்தில், கப்பலேந்தி நின்ற மாதாவை காணாமற் செய்த அந்த பகைவர்கள் வெற்றிகொள்ளப்பட்டனர். கோவிலில் முகப்பு மட்டும் சுவர்களற்று ஒடிந்துபோய் இன்னுமிருந்தது; அந்த ஊர்மக்களின் சிதைக்கப்பட்ட வாழ்வைப் போலவே.

வெற்றிலைக்கேணிப் படைத்தளம் அப்பகுதிக்கான வெறும் ஆக்கிரமிப்பு மட்டுமல்ல. இதன் முக்கியத்துவம் பல்வேறு பரிமாணம்கொண்டது. ஒன்று, வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தரைத்தொடர்பைக் கொண்டிருக்கும் இரண்டு பாதைகளில் ஒன்றைத்தடுத்து நிற்பது இது. இரண்டாவது, யாழ்ப்பாணத்தின் மறுதரைத்தொடர்பான ஆனையிறவை அடைந்திருக்கும் இராணுவ

**- பிரபுந்திரன் -**

கூட்டுத்தளத்தின் பாதுகாப்பும், பலமும் வெற்றிலைக்கேணித்தளத்தின் இருப்பில் தங்கியிருந்தது. ஏனெனில் இதன்மூலம் இப்படைத் தளத்திற்கான கடற்தொடர்பை பேணமுடிவதுடன் பக்கவாட்டாக புலிகளின் தாக்குதலச்சுறுத்தலைத் தவிர்த்து ஆனையிறவு தனிமைப்படுதலையும் தவிர்த்துக்கொள்ள


→



www.eelamview.com

www.eelamview.com






முடியும். மூன்றாவது, கடற்புலிகளின் இயக்கத்தை வெற்றிலைக்கேணி கடற்தளத்தைப் பேணினால்மட்டுமே கட்டுப்படுத்தமுடியும். யாழ்ப்பாண இராணுவத்திற்கான ஒரேயொரு விநியோகப் பாதையான கடற்பாதையின் பாதுகாப்பு இப்படைத்தளத்திலேயே தங்கியிருந்தது.

முடிவாக, யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் பாதுகாப்பென்பது, இப்படைத்தளத்திலேயே பெரும்பங்கு தங்கியிருந்தது. எனவே, எம்மண் சுமக்கும் அவலத்திற்கு இப்படைத்தளத்தின் கேந்திர நிலையம் முக்கியமானது. இதனைக் காவலிட்டு நின்ற சிங்களத்தின் வீரர்களும் முக்கியமானவர்கள்தான்; அவர்களது அழிப்பில்தான் எமது உயிர்ப்பு இருக்க முடியுமென்பதால்.

தரையால் ஒரு படைத்தொகுதி, எதிரியைத்தாக்கி முன்னேற, கடலால் ஒரு படகுத்தொகுதி தொடர் தாக்குதலிலீடுபட ஒரு கத்தரிக்கோலைப்போல செயற்பட்ட புலிகளின் தரை, கடல் படையணிகளின் தாக்குதலால் எதிரிகள் வீழ்த்தப்பட்டார்கள். உயரக்கடலில் நின்ற தாய்க்கப்பல் கட்டளையிட முன்னேறின கடற்படையின் எட்டு டோறாப்படகுகள்.

( 08ஆம் பக்கம் பார்க்க )



www.eelamview.com

www.eelamview.com



# சிங்கத்தின் குகையில் அரசோச்சிய புலிக்குரல்

தமிழ்மக்களுக்கெதிரான அரசபயங்கரவாதச் செயல்களை அம்பலப்படுத்துவதிலும்- தமிழினத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதிலும் மாமனிதர் குமார் எல்லோரையும் முந்திக்கொள்வார்.

சிங்களத்தின் அரசியல்வாதிகள் மற்றும் தொடர்பூடகவியலாளர்கள் தமிழினத்திற்கு எதிராக இனவாதம் கக்கினால் அவற்றிற்கெதிராக கர்ணகடூர மொழியில் பதிலிறுத்து சிங்களப் பேரினவாதத்தின் சித்தாந்தத்தளத்தைச் சிதைக்கும் வகையில் தனது கருத்துக்குண்டுகளை, குமார் பொன்னம்பலம் விசிறிவார்.

படுவதை பொறுமையுடன் அனுமதிப்பார். அதிகாரிகள் தேடும் ஆவணங்களை பயணப்பெட்டிக்குள் வைத்துக்கொண்டுவரும் முட்டாள் நானில்லை என்று கூறி, அந்த ஆவணங்களை சேரவேண்டிய இடத்திற்கு சேரவேண்டிய வழிமுறையில் அனுப்பிவைக்கும் விஞ்ஞான வழிமுறைகள் உண்டென்ற சாதாரண அறிவுகூட சோதனைபோடுபவர்களுக்கு இல்லை என்று துணிச்சலுடன் கேலிபேசி - அவமதிப்புக்கு பதிலடியாக சொல்லடிகள் கொடுத்து அவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பியும் வைப்பார்.



**மாமனிதர்**
**குமார் பொன்னம்பலம்**

“இரண்டாயிரமாவது ஆண்டுமுடியும் வரை என்னை உயிருடன் விட்டுவைப்பார்களோ தெரியவில்லை”

கொல்லப்படச் சில நாட்களுக்கு முன்னர் குமார் பொன்னம்பலம் அவர்கள் மேற்குறித்தவாறு கூறியதாக அவரது மனைவி மரணவிசாரணையின்போது தெரிவித்திருந்தார்.

உள்ளுணர்வின் உந்துதல் காரணமாக அவர் எதிர்வுகூறிய அவரது இறப்பு அவர் எதிர்பார்த்தபடியே நடந்துவிட்டது.

**5. 1. 2000** அன்று கொழும்புநகரில், அவரது மோட்டார் வண்டிக்குள் வைத்து, கயவன் ஒருவன் தன் கைத்துப்பாக்கியை இயக்கி ஐந்து குண்டுகளை அனுப்பி குமார் பொன்னம்பலத்தின் உயிரைக்குடித்தான்.

> **புறச்சூழலின் நெருக்கடிகள் -கொலைப் பயமுறுத்தல்களைப் பற்றிக் கவலைப்படாமல் சொல்லவேண்டியவற்றை- சொல்லவேண்டிய இடத்தில் - சொல்லவேண்டும் என்ற மனத்துணிவு- இந்த மனத்துணிவை செயலாகமாற்றும் வீரம், குமார் பொன்னம்பலத்திடம் இருந்தது.**

அத்துடன், இனவெறிச்சட்டங்களால் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ்மக்களை விடுவிப்பதற்காக தனது சட்டத்தொழிலின் பெரும் பகுதிநேரத்தை அர்ப்பணிப்புணர்வுடன், அவர் செலவிட்டார். தமிழ் அரசியல்கைதிகளில் 95 வீதமானோரின் வழக்குகளை குமார்பொன்னம்பலம் கையாண்டார். இதற்காக எதுவித கட்டணங்களையும் அறவிடாது இலவசமாகப்பணி செய்தார். அதைத் தனது கடமை என்று வர்ணித்தார்.

இத்தகைய தமிழினசேவைக்காக குமார் பொன்னம்பலத்தைத் தண்டிக்க பேரினவாதிகள் பலதடவைகள் முயன்றனர்.

அவரது வீட்டிற்கு, கைக்குண்டுவீசி அவரைச் கொல்ல முயன்றனர். தொலைபேசிவாயி

ஆயுதப்போராட்டத்தின் பிறப்புப்பற்றியும்- அதன் தவிர்க்கமுடியாத தேவைபற்றியும் உலகப் பிரமுகர்களுக்கும் விளக்குவார். தமிழ்மக்களுக்கு எதிரான மனிதஉரிமைமீறல்களை அம்பலப்படுத்தி - அவற்றை சர்வதேச மனிதஉரிமைக் கழகங்களிடம் எடுத்துச்செல்வார். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் போராட்டத்திற்கு ஆற்றவேண்டிய பங்களிப்புகள் பற்றி விளக்குவார். பேரினவாதிகளின் இனவாதக் கருத்துக்களுக்கு பதில் கருத்துக்களை அளிப்பார். அரசபயங்கரவாதத்திற்கு ஆளாகும் தமிழர்களுக்கு சட்டஉதவிகள் வழங்கி- அவர்களின் துயரங்களை பகிரங்கப்படுத்தி சிங்கள அரசை சர்வதேசத்தின்முன் தோலுரித்துக் காட்டுவார். தமிழ்மக்களின் தலைமைச்சக்தி புலிகள் இயக்கம்தான் என்று வாதிடுவார். புலிகளின் போராட்ட அரசியலை முழுமையாகத்தான் ஏற்றுக்கொள்வதாக பிரகடனம் செய்வார்.

**- எல்லாளன் -**

> **பேரினவாதத்தின் மையநிலத்தில் வசித்தபடி பேரினவாதிகளுக்கு சிம்மசொப்பனமாகச் செயற்பட்டவர் மாமனிதர் குமார்பொன்னம்பலம். பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் கொழும்புவாழ் புலியாகவே அவர் இருந்தார். பிரகடனப்படுத்தப்படாத தமிழீழ அரசின் கொழும்புப்பேச்சாளர் என்றே குமாரை பேரினவாதிகள் அழைத்தனர்.**

சிங்களப்பேரினவாதிகளின் தமிழர்விரோதக் கருத்துக்களுக்கு சுடச்சுட, ஆணித்தரமான பதில்களை வழங்கி - எதிர்வாதம் புரிந்த தமிழீழ தேசப்பற்றாளர் ஒருவரின் குரலை இனி நாம் கேட்கமுடியாது.

குமார் பொன்னம்பலம் கொலைசெய்யப்பட்ட செய்தி ஈழத்தமிழர்கள் அனைவரினதும் குடும்பசோகமாக அமைந்துவிட்டது.

அவரது இழப்பிற்கு இரங்கல் தெரிவித்தும் அவரின் போராட்டப் பங்களிப்பை நினைவுகூர்ந்தும் தமிழர் தொடர்பூடகங்கள் அஞ்சலி செலுத்தி- அவரைக் கௌரவப்படுத்தின. தமிழீழத்திலும் - புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் அவருக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. படையினரின் நெருக்கடிகளையும் அசட்டை செய்துவிட்டு ஆயிரக்கணக்கில் கொழும்புநகரில் திரண்ட தமிழர்கள் அவரது புகழுடலுக்கு இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக குமார் பொன்னம்பலத்தின் துணிச்சலான போராட்டப்பங்களிப்பைப் புகழ்ந்துபேசிய தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் மாமனிதர் என்ற அதிஉயர் விருதை அவருக்கு வழங்கி- அன்னாரின் தேசிய சேவையை கௌரவித்து- அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பேரினவாதத்தின் மையநிலத்தில் வசித்தபடி பேரினவாதிகளுக்கு சிம்மசொப்பனமாகச் செயற்பட்டவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம். பேரினவாதிகளைப் பொறுத்தவகையில் கொழும்புவாழ் புலியாகவே அவர் இருந்தார். பிரகடனப்படுத்தப்படாத தமிழீழ அரசின் கொழும்புப் பேச்சாளர் என்றே குமாரை பேரினவாதிகள் அழைத்தனர். அந்நாளவுக்கு ஆயுதம் தாங்கிய தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து - கொழும்பிலும், வெளிநாடுகளிலும் தீவிரப்பிரச்சாரம் செய்தவர் அவர்.

லாக சதா கொலைப்பயமுறுத்தல்களை விடுத்தனர். தமது இனவெறிச்சட்டங்களுக்குள் அவரைச் சிக்கவைத்து சிறையில் அடைக்க முயன்றனர். சோதனை என்ற பெயரில் அவரை அவமானப்படுத்தியும்- தொல்லைகள் கொடுத்தும் அவரைப் பழிவாங்க முயன்றனர்.

ஆனால் குமார் பொன்னம்பலம் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக, தனது செயற்பாடுகளை அவர் தீவிரப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

சட்டத்திற்கு புறம்பானவகையில் தமிழர்களைத் தொல்லைப்படுத்தும் ‘பாஸ்’ நடைமுறை மற்றும் அடையாள அட்டைகளுடன் உலாவ வேண்டும் என்ற படையினரின் உத்தரவுகளை தான் நேரடியாகச் சந்திக்கும்போது அவற்றிற்குப் பணிய மறுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகச் சவால்கள் விடுத்தார்.

இவ்விதம் புலிகள் இயக்கத்திற்கும் - போராட்டத்திற்கும் ஆதரவாக பேசியும்-செயற்பட்டும் - ஜனநாயகரீதியில் - உன்னத போராட்டப்பங்களிப்பை குமார் பொன்னம்பலம் வழங்கியுள்ளார். அதன்மூலம் எமது இனத்தின் அறிவுஜீவிகளுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்.

சிங்களப்பேரினவாதிகளுடன் மட்டும் அவர் கருத்துப்போர் தொடுக்கவில்லை, பேரினவாதத்திற்கு ஏவல் செய்யும் தமிழ்க்குழுக்களுக்கு எதிராகவும் அவர் காட்டமானவகையில் தனது எதிர்ப்புணர்வைக் காட்டியுள்ளார். தமிழ்க்குழுக்களைக் கண்டிப்பதற்கு குமார் பொன்னம்பலம் அவர்கள் கடுமையான சொற்களையே தேர்ந்தெடுப்பார்.

நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டபோது அவரது இறுதிச்சடங்கை கொழும்புவாழ் தமிழர்கள் பகிஸ்கரித்திருந்தனர். இதற்காக தமிழ் மக்களை குறிப்பாக தமிழ்அறிவுஜீவிகளை பேரினவாதிகள் கண்டித்தனர். இதற்காக

> **இறந்தவருக்கு இறுதி மரியாதை செலுத்துவது ஒரு மனிதப் பண்பாடு. பகைவனாக இருந்தாலும் அந்த நாகரீகத்தைக் கடைப்பிடிப்பது மனிதமாண்பு. ஆனால், இறந்தவர் ஒரு இனத்துரோகி என்றால் - அவரது செயற்பாட்டால் ஒரு இனமே அவலத்தை சந்தித்தது என்றால் அத்தகைய கோடாரிக் காம்புகளுக்கும் இறுதிக் கௌரவம் வழங்க வேண்டும் என்ற கருத்தை குமார் பொன்னம்பலம் நிராகரித்தார்.**

புறச்சூழலின் நெருக்கடிகள்-கொலைப்பயமுறுத்தல்களைப் பற்றிக் கவலைப்படாமல் சொல்லவேண்டியவற்றை - சொல்லவேண்டிய இடத்தில்-சொல்லவேண்டுமென்ற மனத்துணிவு, இந்த மனத்துணிவை செயலாகமாற்றும் வீரம் குமார் பொன்னம்பலத்திடம் இருந்தது.

தமிழரின் போராட்டத்திற்கு ஆதரவாக வெளிநாடுகளில் பணிசெய்துவிட்டு கொழும்பு திரும்பும்போது விமானநிலையத்தில் வைத்து சோதனை என்ற பெயரில் அவமானப்படுத்தப்

குமார் பொன்னம்பலத்தையும் பேரினவாதிகள் கண்டித்திருந்தனர்.

இறந்தவருக்கு இறுதிமரியாதை செலுத்துவது ஒரு மனிதப் பண்பாடு. பகைவனாய் இருந்தாலும் அந்த நாகரீகத்தைக் கடைப் பிடிப்பது மனிதமாண்பு. ஆனால், இறந்தவர் ஒரு இனத்துரோகி என்றால் - அவரது செயற்பாட்டால் ஒரு இனமே அவலத்தை சந்தித்தது என்றால் அத்தகைய கோடாரிக்காம்புகளுக்கும் இறுதிக்



www.eelamview.com

www.eelamview.com





திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் உன்னதமான போராட்டப் பங்களிப்பைப் பாராட்டி - மாமனிதர் விருது வழங்கி, தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த செய்தி

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
08. 01. 2000

தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து, அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றிவந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்துவிட்டது. பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன், நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பிவந்தவர் சிங்களத்தின் தலைநகரில் தனித்துநின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்த போதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

திரு பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர் தமிழீழத் தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர்தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும், எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார் எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்து வந்தார். நேர்மைத் திறமையுடன், அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

கௌரவம் வழங்கவேண்டும் என்ற கருத்தை குமார்பொன்னம்பலம் நிராகரித்தார்.

நீலன் திருச்செல்வத்தின் இறுதிச்சடங்கைப் புறக்கணித்த தமிழர்களின் செயல் நியாயமானது என்று விளக்கங்கள் பலகூறி நியாயப்படுத்தி 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழுக்கு அனுப்பி வைத்தார்.

சந்திரிகா அம்மையார் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி இரண்டாம்நாள் சிங்களமக்களுக்கு தொலைக்காட்சிவாயிலாக அம்மையார் உரையாற்றினார். கொழும்புவாழ் தமிழர்கள் மத்தியில் பதட்டமான சூழல் தோன்றிய நேரம் அது. அம்மையார் தனது உரையில் தமிழர்களை குறிப்பாக போராட்டத்தை ஆதரிக்கும் கொழும்புவாழ் தமிழர்களை கடுமையாக எச்சரித்தார். அந்த எச்சரிக்கை உரைக்கு குமார் பொன்னம்பலம் துணிச்சலுடன் பதிலெழுதினார். ''உம்முடைய உரையில் நீர்யாரை எச்சரித்தீரோ அவர்களில் நானும் ஒருவன்'' என்று எழுதினார். அதேவேளை ''உம்முடைய எச்சரிக்கைகளுக்கு அடிபணிய மறுப்பவர்களில் நானும் ஒருவன்'' என்றார். ''உம்மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலைக் குறிப்பிட்டு அது ஒரு 'இருண்டஇரவு' என வர்ணித்திருந்தீர்கள். ஆனால் உங்களுக்கு முன்னரே - உங்களது தலைமையிலான படையினரின் வெறிச்செயல்களால் ஆயிரக்கணக்கான தமிழ்ப்பெண்கள் அந்த இருண்டஇரவுகளைச் சந்தித்துள்ளனர்'' என்று சுட்டிக்காட்டினார். இவ்வளவையும் துணிச்சலுடன் எழுதிய குமார் பொன்னம்பலம் அவர்கள் தனது பதில்மடலை எழுதுவதற்குப் பயன்படுத்திய ஆரம்பவாக்கியம் அவரது அஞ்சாமையின் உச்சக்கட்டத்தையும் - தமிழீழத்தேசப் பற்றையும் வெளிப்படுத்துகின்றது. **''நான் ஒரு தமிழீழத்தவன் என்ற வகையில் இதை எழுதுகின்றேன். புலிகள் இயக்கத்தினது அரசியல் சித்தாந்தத்தின் தீவிர ஆதரவாளன் என்றவகையில் இதை எழுதுகின்றேன்''** என்று கடிதத்தை தொடக்கியிருந்தார்.

சாவரக்கன் தன்னை நெருங்கிவிட்டான் என்பது குமார் பொன்னம்பலத்திற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. தனது சாவை எதிர்வுகூறும் அளவுக்கு அது அவருக்குத் துல்லியமாகத் தெரிந்தது. எனினும், உயிருக்கு அஞ்சி கொள்கையில் பின்வாங்கி அடிபணிய அவர் விரும்பவில்லை.

சாவுவரும் என உறுதியாகத் தெரிந்திருந்தும் போராடுவது போராளிக்குணம். அந்த வகையில், குமார் பொன்னம்பலம் ஒரு போராளிதான். O

# சந்திரிகாவிற்கு ஒரு பகிரங்கக்கடிதம்!

## - மாமனிதர் குமார் பொன்னம்பலம் -

நீங்கள் சனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு 22.12.99 அன்று ஆற்றிய தேர்தல் வெற்றிப் பேச்சுக் குறித்து எழுதுகின்றேன்.

நான் இக்கடிதத்தை தமிழ் ஈழவன் என்ற முறையில் எழுதுகின்றேன் அதிலும் மிகவும் முக்கியமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் சித்தாந்தத்தை உண்மையாகவும் மனம் விரும்பியும் ஆதரிப்பவன் என்ற வகையிலும் அதன் மேல் பற்றுறுதி கொண்டு தெற்கில் வாழ்பவன் என்ற வகையிலும் எழுதுகின்றேன். எனது இந்த நிலைப்பாட்டை இத்தீவினுள்ளும் அதற்கு வெளியேயும் வார்த்தைகளாலும் எழுத்தாலும் கூறியவன் என்ற வகையிலும் எழுதுகின்றேன் உங்கள் பேச்சில் நீங்கள் இனங்கண்டவர்களுள் ஒருவன் என்ற வகையிலும் எழுதுகின்றேன. அத்துடன் உங்கள் பேச்சில் வெளிப்படையாக விடப்பட்ட அச்சுறுத்தல் கண்டு அஞ்சாதவன் என்ற வகையிலும் எழுதுகின்றேன்.

உங்கள் பேச்சோ வயிற்றைக் குமட்டும் அளவிற்கு 'அமைதி' என்ற சொல்லால் நிறைந்திருந்தது. ஆனால் உங்கள் பேச்சின் போக்கில் இணக்கத்திற்கான அல்லது அமைதிக்கான விடயங்கள் எதுவும் இருக்கவில்லை.

நீங்கள் நட்புக்கரங்களை விரித்து உங்களது ''தமிழ் சகோதர, சகோதரிகளுக்கு'' உணர்ச்சி ததும்ப உரத்து அழைப்பு விடுத்தீர்கள். ஆனால, பல தினங்களுக்கு முன்னால் அனுராதபுரத்தில் பேசும்போது இத்தீவானது சிங்கள நாடு அத்துடன் ஒரு பௌத்த நாடு என்ற ஏற்றுக்கொள்ள முடியாத உங்கள் பேச்சை நினைவுகூருகின்றபோது, உங்களது நேர்மையற்ற தன்மையே வெளிப்படுகின்றது

நீங்கள் 18 டிசம்பர் 1999 இரவை (சந்திரிகாவின் குண்டுவெடிப்பு) ''ஒன்றுக்கு மேற்பட்ட தடவை இருளின் கைகளால் இந்நாடானது தொடப்பட்ட இரவுகளில் ஒன்று என வரலாற்றில் இடம்பெறும்'' எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் பாதிக்கப்பட்டதால் அது குறித்து சொல்லலங்காரத்தில் ஈடுபட்டீர்கள். தமிழீழத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைம்பெண்கள் இருக்கின்றார்கள் என்பதும், இருளின் கைகளால் தொடப்பட்ட இரவுகளில் ஒன்றாக அவர்களது சில இரவுகள் இருந்திருக்கும் என்பதும், இதற்கு உங்கள் படையின் கட்டளைத் தளபதியாகிய உங்களின் தூண்டுதலே காரணம் என்பதும் உங்களுக்குத் தெரியாதா?

நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க விரும்புகின்றீர்கள். அதனை முடிந்தால் செய்துபாருங்கள். இந்த முயற்சியுடன் இத்தீவில் நிரந்தர அமைதிக்கான வாய்ப்பு எப்போதும் இல்லாது போகும். உங்கள் தேர்தல் முடிவுகள் ஒன்றை இரக்கமற்ற வகையில் எடுத்துக் காட்டுகின்றன. அதாவது எல்லாத் தமிழர்களும், தமிழ் ஈழவர்கள் மட்டுமல்ல மலையகத் தமிழர்களும் உங்களை விரும்பவில்லை. ஏனெனில் இனியும் உங்களை அவர்கள் நம்பத் தயாராக இல்லை. அத்துடன் அவர்கள் உங்களிடம் இருந்து ஒரு அரசியல் தீர்வையும் விரும்பவில்லை. தேர்தல் முடிவானது:- நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தப் போகின்றது என்ற உங்கள் நிலைப்பாட்டிற்கு எதிரான குற்ற ஆவணப் பத்திரமாகும்

உங்கள் இணக்கப் பொதி குறித்துப் பார்ப்போம் உங்களது ஆட்சி தொடங்கிய முதல் மூன்று ஆண்டுகளிலும் மூன்று பொதிகள் வைக்கப்பட்டன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இவை குறித்து முணுமுணுப்புக் கூட இருக்கவில்லை. இம்மூன்று பொதிகளும் ஒன்றன் பின் ஒன்றாகவைக்கப்பட்ட போது ஒவ்வொன்றும் முன்பிருந்ததை விடக் குறைவாகவே இருந்தன. அரசியல் தீர்வொன்றை உண்மையாக அடைய விரும்பும் ஒருவர் ஒவ்வொரு கோடையின் போதும் பொதிகளுடன் இவ்வண்ணம் பொறுப்பற்று நடந்து கொண்டிருக்கமாட்டார். உண்மையில் அரசியல் தீர்வைக் காணவிரும்பும் ஒருவர் ஒரு பொதியுடனேயே உறுதியாக நின்றிருப்பார் அல்லது அழிந்திருப்பார்

நீங்கள் இத்தீவில் ''சுதந்திரமாக நடந்து திரியும் எதிரியை'' மிகத் தெளிவாக காண்கிறேன் எனச் சொல்கிறீர்கள். நீங்கள் அந்த எதிரியை 'வெறுப்பு' என இனங்கண்டுள்ளீர்கள். நீங்கள் சொல்ல விரும்பும் அந்த எதிரி இத்தீவில் வாழும் தமிழர்களேயன்றி வேறொன்றுமில்லை. கடவுளுக்கு நன்றி ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனாலும் இதற்குப் பதிலடி தரப்பட்டுள்ளது, தேர்தல் முடிவுகள் இதற்குச் சான்றாக உள்ளன.

உங்களுக்கு எதிராக ''தமிழீழ விடுதலைப் புலிகள் புரியும் பயங்கரவாதச் செயற்பாடுகள் அனைத்தும் தோல்வி காணும்'' என நீங்கள் ஆரவாரம் செய்கின்றீர்கள். அந்த மூச்சோடே எல்லாத் தமிழர்களும் பிரபாகரனைப் பேச்சுவார்த்தைக்கு வரச்செய்ய முயலவேண்டும் என

(13ம் பக்கம் பார்க்க)






www.eelamview.com

www.eelamview.com



( 05ஆம் பக்கத் தொடர்ச்சி )



கேணல் பானு

இதை எதிர்பார்த்து காவலிட்டு நின்ற கடற்புலிகள் கடற்படையினரை எதிர்கொண்டனர். கொந்தளிக்கும் கடலில் இரண்டு படைகளின் வெற்றி தோல்விக்கான கடுஞ்சமர் நடந்தது. எதிரியின் போர்ச்சாதனங்கள், கடற்கலங்கள் வலுவுள்ளவையாக இருக்கலாம். ஆனால், சாதனங்களால் மட்டுமே போர் வெற்றிகொள்ளப்படுவதில்லை. அதற்கும் மேலால், அதைத் தாங்கி நிற்கும் மனிதர்களின் மனோவலிமையிருக்கிறது. அதுவே ஒருவகையில் கருவியின் பயன்திறனைக்கூட தீர்மானிக்கிறது. அங்கு நடந்த கடற்சமரில் எம் வீரர்கள் வென்றார்கள். பகைவர்கள் பின்வாங்கினர். தனிமைப்படுத்தப்பட்ட வெற்றிலைக்கேணித்தளம் அன்று பிற்பகற்பொழுதில் எம்மால் வெற்றிகொள்ளப்பட்டது. வெற்றிலைக்கேணி கடற்தளம் அமைந்திருந்த புவிநிலைகருதி (முனைப்பிரதேசம்) தெற்காக முல்லைத்தீவைக் கடந்தும், வடக்காக பருத்தித்துறை வரையும் கடற்புலிகளின் நடமாட்டத்தை அவதானிக்கவும், கட்டுப்படுத்தவும் (றேடர் கருவிமூலம்) முடியுமாக இருந்தது; சிங்கள கடற்படைக்கு ஆனால் இப்போது வெற்றிலைக்கேணியின் இழப்பு முல்லைத்தீவு, வெற்றிலைக்கேணி உட்பட ஒரு பெரும் கடற்பரப்பை பாதுகாப்பாக கடற்புலிகளிடம் மீட்டுக் கொடுத்துள்ளது. இத்தளம் மூலம் கடற்படைக்கிருந்த அவதானிப்பு அனுகூலமும், தாக்குதல் அனுகூலமும் புலிகளின் கைகளிற்கு மாறியிருக்கிறது. இதனால கடற்படையும், யாழ்ப்பாணத்தில நிலைகொண்டுள்ள இராணுவமும் தமது பாதுகாப்பின் பலத்தைக்கூட இழந்துவிட்டிருப்பதுடன் கடற்புலிகளின் பலம் உறுதியான நிலையை அடைந்துள்ளது.

**12ஆம் திகதி**

மேலும் இரு சமர்முனை.

இச்சமரை நேரடியாக வழிநடத்தும் தலைவர் திட்டத்தின்படி மேலும் இரு சமர்முனைகளைத் தொடங்குவதற்குக் கட்டளையிட்டார். ஒன்று, கேணல் பால்ராஜின் கட்டளையின் கீழ் ஒரு படைத்தொகுதி வெற்றிலைக்கேணிக்கும், இயக்கச்சிக்குமிடையிலான இராணுவ வலயத்தில் எதிரிகளைத் தாக்கியழித்து முன்னேறி இயக்கச்சிப் பகுதியில் தடுப்பரண்களை அமைக்க வேண்டும். இழந்த பிரதேசத்தை மீளக்கைப்பற்ற எதிரி தயாராகுமுன், எதிரியைத்தாக்கி இயக்கச்சி - ஆனையிறவு கூட்டுத்தளத்திற்குப் பின்வாங்க வைப்பது இதன அடிப்படைத் தேவையாக இருந்தது.

எனவே மாலதி படையணி முள்ளியான் இராணுவத்தளம் நோக்கி முன்னேற, யாழ்படையணியுடனான மாலதி படையணியின் ஒரு அணிகொண்ட படைத்தொகுதி மண்டலாயூடாக இயக்கச்சி நோக்கி முன்னேறியது. முள்ளியான் நோக்கி முன்னேறிய மாலதி படையணி, எதிகளைத்தளமும், இரண்டாவது 'கெமுனுவோச்' பற்றாலியன் தலைமையகமும் அமைந்திருந்த அப்படைத்தளத்தைத் தாக்கி எதிரிகளை வெற்றிகொண்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து பின்வாங்கிய எதிரிகள் மீள் ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்த இத்தளம் எமது கைகளில் வீழ்ந்தது.

அதே நேரம், லெப். கேணல் மகேந்தியின் தலைமையில் முன்னேறிய படைத்தொகுதியை மண்டலாயில் தடுத்து நிறுத்தி சண்டையிட்டது எதிரிகள் படை. உடனோக்கிய எமது முன்னேற்றம் தமது இருப்புக்கு அச்சுறுத்தலாகி விடுமென்று உணர்ந்த எதிரிப்படைத்தலைமை, அதைத்தடுத்துநிறுத்த போரிடுமாறு தன் படைக்கு கடுமையான கட்டளையை வழங்கியிருந்தது. மண்டலாயில் மூண்ட கடுமையான சண்டையால் 50க்கு மேற்பட்ட எதிரிகள் தமது உயிர்களை இழக்க நேரிட்டதைத் தவிர வேறெதையும் அவர்களால் சாதித்துக்கொள்ள முடியவில்லை. எதிரியின் உடல்களைக் கடந்து அப்படைத்தொகுதி மேலும் முன்னேறியது. முள்ளியானிலிருந்து மற்றைய படைத்தொகுதியும் முன்னேறியது.

இன்று தொடங்கிய இரண்டாவது சமர்முனை சாவகச்சேரிக்குத் தெற்கே உள்ள கேரதீவு, அறுகுவெளி நோக்கியது. வன்னி-யாழ்ப்பாணத் தொடர்பை துண்டித்திருந்த சங்குப்பிட்டி - கேரதீவு கடல்நீரேரியைக் கடந்து கேரதீவு கடற்தளத்தை கைப்பற்றிப் பாதுகாப்பது இதன் இலக்காக இருந்தது. சாவகச்சேரியிலிருந்து சில கிலோமீற்றர் அண்மையிலிருக்கும் இப்பிரதேசத்தை மீட்பதன் மூலம் சங்குப்பிட்டி - கேரதீவு தொடர்பைப் பேணுவது நோக்கமாக இருந்தது. இச்சமர்முனையில் மாலதிபடையணி, ஜெயந்தன் படையணி, இம்ரான்- பாண்டியன் படையணி ஆகியவற்றின் அணிகளைக்கொண்ட படைத்தொகுதி களமிறங்கியது.

காலை 10 மணியளவில் லெப். கேணல் விமனின் தலைமையில் கிழக்கரியாலையிலும், அறுகுவெளியிலும் இருவேறு பிரிவுகளாக தரையிறக்கப்பட்டது இப்படைத்தொகுதி. முட்டாள்த்தனமாக்கி எமது அணிகள் முன்னேறியிருந்தன.

மேஜர் பாலனின் கிட்டு பீரங்கிப்படையணி 'பற்றிக்' சூட்டாதரவை வழங்க, லெப். கேணல் சேரமான் தலைமையில் கடற்புலிகள் முன்னேறும் படையணிகளைத் தரையிறக்கினர். முறியடிப்பதற்காக வரப்போகும் விசேட படகுப் பிரிவை (SBS) எதிர்கொள்ள கடற்புலிகள் காத்திருந்தனர். தரையிறங்கிய அணிகள் முன்னேறித் தாக்குதலிலீடுபட்டன. ஒரு அணி அறுகுவெளியிலமைந்திருந்த இராணுவ முகாமை வெற்றிகொள்ள, மறு அணி கேரதீவு கடற்தளத்தை நோக்கி முன்னேறி அதைத் தாக்கியழித்து வெற்றிகொண்டது. 'றாடார்' சாதனம் உட்பட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அன்று மாலைக்குள் கேரதீவு, அறுகுவெளியுள்ளிட்ட ஒரு நிலப்பரப்பைத் தக்கவைத்து சங்குப்பிட்டியூடாக ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதை உறுதிப்படுத்திக்கொண்டது அப்படைத்தொகுதி.

இன்று மாலை, கேணல் கருணாவின் கட்டளையில் இயங்கிய சமர்முனையில் புல்லாவெளி நோக்கி முன்னேறியிருந்த படைத்தொகுதி சண்டையைத் தொடங்கியது. உதவிக்குவந்த படையினரைத் தாக்கியழிக்க நீரேரியிலமைந்திருந்த காவலரண்களை கடற்புலிகள் தகர்த்தழிக்க அப்படைத்தளத்தை வெற்றிகொண்டனர் புலிகள்.

தனது படையின் பலத்தாலும், இயற்கையாக அமைந்த புவியியல் சாதகத்தாலும், ஆக்கிரமிப்பின் உறுதிப்பாட்டில் இறுமாந்திருந்த பகைவரின் படைத்தலைமை ஒரே சமயத்தில் மூன்று முனைகளில் இயங்கும் இச்சமருக்கு முகங்கொடுக்க முடியாது திணறியது. தொடங்கப்பட்ட ஒவ்வொரு சமர்முனை நோக்கங்களும் அறியப்படாமல் எதிரி திக்குமுக்காடினான். தனது படைவலுவை எந்த முனையில் நிறுத்திச்



## பலம்தான் விடுதலையின் தாரகமந்திரம்

எதிரியைப் பொறுத்தவரை நீரேரிகடந்த எமது முன்னேற்றம், சாத்தியமில்லையென்றே நம்பியிருந்தான். ஏனெனில் அதைத் தடுப்பதற்காக அவன் ஏற்படுத்தியிருந்த பலம் வலுவானது. கிளாலி, கேரதீவு கோயிலாக்கண்டி, குருநகர் ஆகிய இடங்களிலமைந்திருந்த கடற்தள 'றாடர்' சாதனங்களை மீறி எம்மால் நகர்ந்துகொள்ள முடியாது. அப்படியான எமது நகர்வை முறியடிப்பதற்காக சிறப்புப் பயிற்சிபெற்ற விசேட படகுப்படைப்பிரிவு (SBS) நிலை நிறுத்தப்பட்டிருந்தது. இவற்றை மீறி எமது நகர்வு நடந்துவிட்டால் அவற்றை முறியடிப்பதற்கான படைத்தளங்களும் மீண்டும் பின்வாங்க முடியாதபடி கடற்படையின் தடுப்பும் இருக்குமாறு எதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தான். இத்தகைய எதிரியின் எதிர்பார்ப்பை சண்டையிடுவதென்பதில் எதிரி குழப்பமடைந்தான். பன்னிரெண்டாம் திகதி இருண்டது. பகைவர்களது மனங்களுங்கூட அப்படித்தான்.

**13ஆம் திகதி.**

வெற்றிலைக்கேணியை வெற்றிகொண்ட படைத்தொகுதி இத்தளத்தின் பாதுகாப்பிற்காகத் தொடர்ந்து முன்னேறியது. எதிரியை நிலையெடுக்கவிடாது வேகப்பின்தொடர்வைச் செய்த இப்படைத்தொகுதி ஆழியவளை மினிமுகாமையும் தாக்கி அப்பிரதேசத்தையும் மீட்டெடுத்துக்கொண்டது.

இன்றைய நாளில் புல்லாவெளியிலிருந்து முன்னேறிய படைத்தொகுதியும் →



www.eelamview.com

www.eelamview.com





## ஓயாத அலைகள் - 3 சமர்முனை:-
## படைக்கலங்கள் பறித்தெடுக்கும் புலிகள்சேனை

மண்டலாயூடாக முன்னேறிய படைத்தொகுதியும் வாடியடிச் சந்திவரை எதிரிகளை விரட்டின. எதிரி வலுவான தற்காப்பரண்களை நெருங்கவிடாது அமைத்திருந்தபோதும் அலைகளின் வீச்சில் அது அள்ளுண்டு போனது.

**14ம், 15ம் திகதிகளில்.**

தொடர்ந்த இவ்விரு நாட்களில் சண்டையிட்ட அணிகளுக்கு ஓய்வு வழங்கப்பட்டு மீளொழுங்குபடுத்தப்பட்டது. சண்டையின் தீவிரத்தில் சரியாக சாப்பிட்டிராத போராளிகளுக்கு பெற்றவர்களைப் போல தங்கள் வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டிகூட மக்கள் செய்தனுப்பிய உலருணவுகள் கைகளில் கிடைத்தது. தனங்கிளப்பு, இயக்கச்சிப் பகுதிகளில் சாப்பாடு சரியாகக் கிடைப்பதுகூட அப்போது சாத்தியப்படாதிருந்தது. இந்த உலருணவுதான் வயிற்றுப் பசிக்கு தீர்வு கண்டது. களத்திற்கு தன் பிள்ளையிடம் உலருணவு கொடுத்தனுப்பிய தாய் தன் பிள்ளையைக்கூட இழந்திருந்தாள். அந்த உலருணவின் பெறுமானம் எத்தனை பெரியது.

களத்தில் வெற்றியின் சந்தோசம் ஒருபுறம், வீரச்சாவு நிகழ்வுகளின் துயரமொருபுறம், இதற்குள்ளும் இரத்தம் வழங்குவது, உலருணவு திரட்டுவது, வீதி திருத்துவது என்ற அவசர வேலைகள் ஒருபுறமாக மக்கள் திரிந்தார்கள். எல்லைக்குப் போவதற்குத் தயாராகும் எல்லைப்படை வீரர்களும், காயமடைந்துவந்த எல்லைப்படை வீரர்களும் மக்களின் கவனத்திற்குரியவர்களாயினர். களத்தில் ஒரே ஆரவாரம். தம்புதல்வர்களின் வீரம்செறிந்தபோர் இத்தனை மகத்தான வெற்றிகளையீட்டுவது அவர்களுக்குப் பிரமிப்பைக் கொடுத்தது. ஓயாத அலைகள் - 03 ஐ தலைவர் நேரடியாக வழிநடத்துகிறாரென்பதில் அதிக உற்சாகம்வேறு அவர்களுக்கு.

**16ம் திகதி நான்காவது சமர்முனை.**

இரண்டு பிரிகேட்கள் நிலைகொண்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்ததும், மிகப் பலப்படுத்தப்பட்டதுமான பரந்தன் முதல் உமையாளபுரம் வரையிலான பகுதியில் சமரை வழிநடத்த தளபதி கேணல் தீபன் தலைவரால் நியமிக்கப்பட்டார்.

பரந்தன் வயற்பூமியால் சூழப்பட்ட சிறுநகரம். விவசாய மக்களுக்கேயுரிய அமைதியும், எளிமையுமான வாழ்வைக் கொண்ட பூமியிது. இங்கு இரசாயன தொழிற்சாலை நிறுவப்பட்டதன்பின் பரந்தன் மேலும் களைகட்டியிருந்தது. அந்த அழகிய அமைதியான பூமியின் ஆடை அவிழ்க்கப்பட்டு ஆண்டுகளாகிவிட்டன. அந்த நீசர்கள் தான் அந்நிலத்தின் அசிங்கமாய் நின்றார்கள். அவர்களின் கொலைக் கரங்கள் இரண்டடி கொண்டவையல்ல. ஆட்லறியின் தூரவீச்சு எவ்வளவோ அதுவே அவர்களின் கொலைக்கரத்தின் நீளமும். எனவே கிளிநொச்சி, உருத்திரபுரம், முரசுமோட்டையென மூன்று திக்கிலும் மக்கள் தம் வாழ்வை இழந்தனர். இப்பொழுது அப்படைத்தளத்திற்கான சண்டைகள் தொடங்கப்பட்டாயிற்று. அம்மக்களின் வாழ்வின் ஜீவஊற்றுத் தெரியும் நேரமிது.


டாங்கியணியின் தாக்குதலுதவியோடு மேஜர் தர்சனின் ஒருங்கிணைப்பினாலான பீரங்கிப் படையணி 'பற்றரி'களின் சூட்டாதரவோடு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் லெப். கேணல் மைதிலியின் மாலதி படையணியுமிணைந்த ஒரு படைத்தொகுதி லெப். கேணல் இராஜசிங்கனின் தலைமையில் முல்லை - பரந்தன் வீதிபால் முன்னேறியது. கண்டிவீதிபால் லெப். கேணல் விமலின் தலைமையில் இதே படையணிகளைக்கொண்ட மற்றுமொரு படைத்தொகுதி முன்னேறியது. புலனாய்வுத் துறை தாக்குதற் படையணி லெப். கேணல் அறிவின் தலைமையில் இவ்விரண்டு வீதிகளுக்குமிடையிலான பிரதேசத்தில் முன்னேறியது. திட்டத்தின்படி நண்பகல் 1 மணிக்கு சண்டையைத் தொடங்கி எதிரிக்காவலரண்கள் வெற்றிகொள்ளப்பட்டு தமக்குள் இணைப்பையேற்படுத்திக்கொண்டன படைத்தொகுதிகள்.

அன்று இரவுக்குள் திட்டத்தின் முதலிலக்கு பூர்த்திசெய்யப்பட்டு, அடுத்த நகர்வுக்கான ஒழுங்குகள் நடந்துகொண்டிருந்தன. எதிரி பின்னால் உள்ள வீதியில் புதிய அரண்களை அமைத்து நிலையெடுத்தான். நாம் மேற்கொண்டு முன்னேறாதது எமது இயலாமையென எதிரிப்படையதிகாரி எண்ணியிருக்கவேண்டும். அல்லது தன் பலத்தில் அதிக நம்பிக்கைகொண்டிருக்க வேண்டும். ஏனெனில் கேணல் தீபனின் தொலைத்தொடர்பு அலைவரிசையில் குறுக்கிட்ட எதிரியின் உயர்- அதிகாரி இப்படிச் சொன்னான் ''உன்ர தளபதி 5. 2ஐ ( தளபதி ராகவனின் சங்கேதப் பெயர் ) ஒட்டிசுட்டானில நாங்கள் போட்டிட்டம், எப்படி? இனி என்ன செய்யப் போகிறாய்''. ''அதுக்குத்தான் இப்ப உன்னட்ட வந்திருக்கிறம்'' என்றார் தளபதி தீபன். ''எங்களையென்ன ஒட்டிசுட்டான் ஆமியெண்டு நினைச்சியே'' என்றான் எதிரி. ''நடக்கப்போறத பொறுத்திருந்துபார்'' என்று நிதானமாகவும், சவாலாகவும் சொன்னார் தளபதி தீபன்.

மறுநாட் காலை தொடங்கிய சண்டையில் முன்னேறிய எமது படைத்தொகுதிகளின் கைகளில் பரந்தன் பிரதான படைத்தளம் விழுந்தது. இது எட்டாவது கஜபாகு றெஜிமெண்டினுடையது. அடுத்திருந்த பிரதான படைத்தளமும் மூர்க்கத்துடன் முன்னேறிய புலிகளிடம் வீழ்ந்தது. இது ஆறாவது கெமுனுவோச் பற்றாலியனுடையது. நண்பகல் 11 மணிக்கு இவை முழுமையாக வெற்றிகொள்ளப்பட்டிருந்தன.

வெறுமைநகரில் வேட்டுச்சத்தங்களைத் தவிர வேறு ஒலிகளில்லை. ஒரு நகரத்தின் வாழ்வையே கொன்றொழித்து, கொல்லாமையைப் போதித்த புத்தனின் சிலையை போதிமரத்தடியில் இருத்தியிருந்தார்கள், அந்தக் கயவர்கள். பொறுக்கமுடியாத புத்தபெருமான் தன் கண்களை இறுகமூடி நிஷ்டையில் இருந்து விட்டதைப்போலிருந்தது.

மற்றும் இன்றுதான் நீரேரியில் எமது விநியோக நடவடிக்கைகளையும், ஏனைய செயற்பாட்டையும் தொல்லைப்படுத்திவந்த MI-24 உலங்குவானூர்தி



**கேணல் சூசை**

சுட்டுவீழ்த்தப்பட்டது. அதன்பின் விமானப்படை முடமாகிப்போனது;

**18ம் திகதி.**

தளபதி கேணல் கருணா வழிநடத்திய சமர்முனையின் கட்டம் IIக்கான இலக்கு நிறைவடைய வத்திராயன்வரை அணிகள் நகரவேண்டியிருந்தது. ஆனால், பின்வாங்கியோடிய இராணுவத்தினரை இணைத்து உடுத்துறை பாடசாலைக் கட்டிடத்தொகுதிகளை வாய்ப்பாக பயன்படுத்தி எதிரி அதையொரு தளமாக மாற்றியிருந்தான். சென்ற நாட்களில் பலப்படுத்தப்பட்டிருந்த இத்தளத்தைத் தாக்குவதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்ட அணிகள் இன்று சண்டையைத் தொடங்கின. முடிவில் இதை வெற்றிகொண்டு வத்திராயன் நோக்கி நகர்ந்த அணிகள் அங்குள்ள மினிமுகாமையும் தாக்கி அப்பிரதேசத்தையும் மீட்டுக்கொண்டன.

**20ம் திகதி 54 – 6 பிரிகேட் வீழ்ச்சி.**

கடந்த மூன்று நாட்கள் இப்படைத்தளத்தை சுற்றியிருந்த முன்னணி காவலரண்களைக் கைபற்றுவதற்காக வீதியின் வலம், இடமாக கடும் சண்டைகள் நடந்தன. வெற்றிகொள்ளப்பட்ட பற்றாலியன்களிலிருந்து தப்பியோடியவர்களும் இங்குதான் நிலைகொண்டிருந்தனர். புதிதாக சிறப்புப்படையினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். இதை இழப்பதில்லையென்பதில் எதிரி உறுதியாக இருந்தான். நிறைந்த கட்டிடத் தொகுதிகளும், பாதுகாப்பான பதுங்குகுழிகளும் எதிரிக்கு நம்பிக்கையை கொடுத்தது. அதைவிட இராணுவத்தினரின் எண்ணிக்கைப் பலம் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. எனவே மூன்றுநாள் சண்டைகளிலும் ஒவ்வொரு காவலரணுக்காகவும் எதிரியும் நாங்களும் கடுமையாகச் சண்டையிட்டோம். சில சமயங்களில் ஒரே காவலரண் மாறிமாறி இருவரிடமும் வீழ்ந்தது. ஆனால், இன்று விடிந்திருந்தபோது ஒவ்வொருநாளும் மீற்றர்க்கணக்கில் முன்னேறிய நாங்கள் அத்தளத்தின் இருபக்க காவலரண்களையும் பிடித்துவிட்டிருந்தோம்.

ஆயினும், எதிரி உள்சுற்றில் பாதுகாபபரண்களை ஏற்படுத்திக்கொண்டான். கட்டடத்தொகுதிகள் மேலும் வாய்ப்பாக இருந்தது அவனுக்கு. எனவே தளத்தின் மையத்தில் தாக்க புலியணிகள் எதிரியரண்களைப் பிளந்து உள்நுழைந்தன. வீழ்ந்தது அப்படைத்தளம். மாடிக் கட்டிடத்தைக்கொண்ட இரசாயனத் தொழிற்சாலை தூண்களாக மட்டுமே உயர்ந்துநின்றது.

**23ம் திகதி மீளக்கைப்பற்ற எதிரி முயற்சி.**

இன்று காலை 6. 30 மணிக்கு இழந்துபோன வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பிரதேசங்களை மீளக்கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர் படையினர். இயக்கச்சிப் பகுதியில் அமைந்த வை. எம். சி. ஏ. வீதி வழியாக முன்னேறி எமது தற்காப்பரண்களைப் பிளந்து, மண்டலாயை அடைந்து அங்கிருந்து வெற்றிலைக்கேணியூடாக கட்டைக்காட்டையும் மீளக்கைப்பற்றுவது என்றிருந்தது இதன் திட்டம். காலை 6. 30 மணிக்கு பெரும் தாக்குதல் பலத்தோடு நடவடிக்கைக்காக வரவழைக்கப்பட்ட

→






www.eelamview.com

www.eelamview.com





## லெப். கேணல் கெங்கா

கொமாண்டோ படைப்பிரிவுடன் எமது காவலரண்களை ஊடறுத்து எதிரி முன்னேறினான். மாலதி, யாழ், இம்ரான் - பாண்டியன் படையணிகளும் உதவிக்கு ஜெயந்தன், புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதலணிகளும் எதிரியை முற்றுகையிட்டு தாக்குதலில் ஈடுபட்டன. முன்னேறிவந்த படையினர் இப்போது தங்கள் வாழ்வின் முடிவுகளைச் சந்தித்துக்கொண்டிருந்தனர். இறுதியில் தமது திட்டத்தைக் கைவிட நேரிட்டதைப் போலவே சகாக்களின் உடல்களையும் கைவிட நேர்ந்தது. எம்மால் மட்டும் 50 வரையிலான உடல்கள் கைப்பற்றப் பட்டன. திட்டத்தின்படி எதிரியின் மீளக்கைப்பற்றல் நடவடிக்கையை அவனது புறப்படும் தளத்தினருகேயே முறியடிக்க வேண்டுமென்பதற்காக இயக்கச்சிவரை முன்னேறித் தற்காப்பில் ஈடுபட்ட படைத் தொகுதி வெற்றிகரமாகச் செயற்பட்டு இதைச் சாதித்தது. கேணல் பால்ராஜின் கட்டளையின் கீழ் லெப். கேணல் பகீரதன் இத்தாக்குதலை வழிநடத்தினார்.

**26ம் திகதி தரையிறக்க முயற்சி.**

தனங்கிளப்பு, கேரதீவு பகுதியை மீளக்கைப்பற்றுவதற்காக எமது தடுப்பரண்களை உடைத்து முன்னேற முடியாத எதிரி, அறுகுவெளியில் வான்வழித் தரையிறக்கம் ஒன்றின்மூலம் இதைச் சாதிக்க முயற்சித்தான். எமது தொடர்புகளைத் துண்டாடி தாக்கவந்த வான்கலங்கள் எமது தாக்குதலால் பின்வாங்கிக்கொண்டன. இத்தரையிறக்க முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

மற்றும், பரந்தன் நோக்கிய சமர்முனையில் புதிதாக சோதியா, இம்ரான் - பாண்டியன் படைத்தொகுதிகளை இணைத்து முன்னேறிய படைத்தொகுதிகள் புளியடி பிரதான தளத்தை கைப்பற்றிக்கொண்டன. தோல்விகண்ட எதிரிப்படை வரிசையில் விஜயபாகு றெஜிமென்டும் இப்போது இணைந்துகொண்டது.

**27ம் திகதி 54 - 5 பிரிகேட் வீழ்ச்சி.**

புளியடியை வெற்றிகொண்ட படைத்தொகுதிகள் உமையாள்புரத்திலிருந்த பிரிகேட் தலைமையகம் உள்ளிட்ட அப்படைத்தளத்தில் இன்று அதிகாலையில் சண்டையைத் தொடக்கின. 'உண்மை வெற்றி' க்கு முன்னேறிய படைவரிசையில் புலிகளால் வெற்றிகொள்ளப்படப்போகும் மூன்றாவது பிரிகேட் இதுவாகும். கிளிநொச்சியில் 54 - 3, பரந்தனில் 54 - 6, இப்போது உமையாள்புரத்தில் 54 - 5.

இங்கிருந்து எதிரி பின்வாங்கினால் வெட்டையும், நீர்நிலையுமான நிலப்பரப்பைக் கடந்து உப்பளத்திற்குச் செல்லவேண்டும். அப்படி நடந்துவிட்டால், உப்பளத்திலிருந்து இனிமேல் அந்த வெட்டைப் பிரதேசத்தைக் கடந்து முன்னேறுவது சாத்தியமற்றுப்போய்விடும். ஏனெனில், கிட்டு பீரங்கிப்படையணியுட்பட விடுதலைப்புலிகளின் படைத்துறை வளர்ச்சியால் இந்த வெளிப்பிரதேசத்தை கடப்பது இனி இலகுவாக இருக்காது. எனவே, உமையாள்புரம் அவனுக்கு முக்கியத்துவம் மிக்கது. ஆயினும், மும்முனைகளில் இன்று நடந்த சண்டையில் எதிரிக்கு அதைத் தக்கவைப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அந்த அழகிய உமையாள்புர கிராமம் தன்னை அலங்கோலப்படுத்தியவர்களிடமிருந்து மீண்டு கொண்டது.

**30ம் திகதி**
மீண்டும் முன்னேறும் முயற்சி.

கேரதீவு - சங்குப்பிட்டிச் சமர்முனையில் வான்வழித் தரையிறக்கம் தோல்விகண்ட நிலையில், தரையாலும், நீரேரியாலும் முன்னேறும் நடவடிக்கையில் எதிரி முயன்றான். சாவகச்சேரியிலிருந்து சில கிலோமீற்றர்களில் நாம் நிலைகொண்டிருப்பதும், தரைவழியாக ஒருதளத்தை குடாநாட்டில் பேணுவதும் யாழ் இராணுவத்திற்கு எப்பொழுதும் அச்சுறுத்தலாக இருக்குமென எதிரி எண்ணினான். எனவே, தனங்கிளப்பிற்கு ஏற்கனவே வரவழைக்கப்பட்டிருந்த சிறப்புப் படையினரைக் கொண்டு எமது தற்காப்பை உடைத்து முன்னேறும் அதேவேளை, கிளாலி நீரேரியூடாக விசேட படகுப்பிரிவைக்கொண்டு பின்புறமாகவும் எம்மைத்தாக்குவதோடு, சங்குப்பிட்டியூடான எமது தொடர்பைத் துண்டித்து, அத்தளத்தில் எம்மை முற்றுகைக்குட்படுத்தி தாக்கியழிப்பதற்காக இருமுனைகளில் எதிரி சண்டையைத் தொடக்கினான்.

விசேட படகுப்படைப்பிரிவை, லெப். கேணல் பகலவனின் தலைமையில் எதிர்கொண்ட கடற்புலிகள் கடும்சண்டையில் எதிரியின் முயற்சியை முறியடித்தனர். முன்னேறி வந்த 'வோட்டசெற்' றை கரும்புலித் தாக்குதல் மூலம் கரும்புலி கப்டன் அறிவரசன் மூழ்கடித்தான். தொடர் சண்டையில் எதிரியின் மூன்று 'புளுஸ்ரார்' படகுகள் சேதமடைந்தன.

நீரேரியில் விசேட படகுப்பிரிவுக்கு இப்படியான கதியேற்பட, தரையில் முன்னேறிய எதிரியை முற்றுகையிட்டுத் தாக்கினர் புலிகள். முற்றுகையிட வந்த படையினர் இப்பொழுது தம் சகாக்களின் உடல்களையுமவிட்டு 50ற்கும் மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்து பின்வாங்கியோடினர்.

**1ம் திகதி.**
இந்த புத்தாயிரமாம் ஆண்டின் முதற்சண்டை.

இந்த ஆயிரமாம் ஆண்டில் உலகில் அமைதி வேண்டுமென்று எவர்தான் கூவினாலும், இனவாதிகளின் காதுகள் அதை இரசித்துக்கொள்ளப் போவதில்லை. இந்த ஆயிரத்தின் முதற்சண்டை இங்குதான் நடந்திருக்கவேண்டும். நள்ளிரவு தாண்டிய வேளை இயக்கச்சி புளியடிச் சந்தியிலிருந்து முன்னேறிய எதிரி எமது தற்காப்பை ஊடறுத்து முகாவில் வீதியைக் கைப்பற்றி கண்டிவீதிக்கான அச்சுறுத்தலை தவிர்த்துவிட விரும்பினான். இதுவே இந்நடவடிக்கையின் உடனடி இலக்காக இருந்தது. கண்டிவீதியை அண்மித்து நாம் நிலையெடுத்திருந்ததால் எதிரிக்கு இந்நடவடிக்கை அவசியமாயிருந்தது.

'ஜயசிக்குறு' யில் இறுதிவரை முன்னேறிய 53வது டிவிசனை வரவழைத்து சிறப்புப்படைப்பிரிவையும் உள்ளடக்கி நடவடிக்கையில் ஈடுபடுத்தினான் எதிரி. இதன் டிவிசன் கொமாண்டர் மேஜர் ஜெனரல் செட்டியாராச்சி நடவடிக்கையைப் பொறுப்பெடுத்து நேரடியாக வழிநடத்தினான்.



## லெப். கேணல் மைதிலி

முன்னேறிய எதிரிகளோடு காலை 6.30ற்கு பெரும் சண்டை மூண்டது. எமது நிலைகளைப் பிளந்து முருகந்தநகர் வரை முன்னேறினான் எதிரி. முறியடிப்புத் தாக்குதலில் இறங்கின புலியணிகள். மேஜர் சாந்தகுமாரியின தலைமையிலான மாலதி படையணியும், யாழ்படையணியும், புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதல் படையணியும் இத்தாக்குதலுக்கு களமிறங்கின. ஒரு கடுமையான சண்டையில் வீரத்தோடு போராடிய புலிகள் தொகைக்கணக்கான எதிரிகளை வீழ்த்தினர். மொத்த அழிவிலிருந்து தம்மைப் பாதுகாக்க 53வது டிவிசன் பின்வாங்கியோடியது.

**விடுதலையின் வெற்றியாண்டு.**

'ஓயாத அலைகள் - 3' என, எமது தலைவர் வழிநடத்தும் இச்சமர், ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களின் வாழ்வில் ஒளியைப் பிறப்பித்து, கட்டம் IIIஇல் தன் இலக்குகளை வெற்றிகொண்டது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் அமைதியைக் கிழித்து முதற்சண்டையைத் தொடக்கிய ஆக்கிரமிப்புத் திமிர்கொண்ட இனவெறியாளர்கள் தங்கள் சகாக்களது உடல்களையே களத்தில் விட்டோடி இந்த புத்தாயிரமாண்டின்முதல் அவமானத்தைத் தமதாக்கிக்கொண்டனர். ஆக்கிரமிப்பாளர்களை வெற்றிகொண்ட இந்த முதற்சண்டையில் புலிகளின் பெண்கள் அணியினரே அதிக பங்கேற்றனர் என்பது குறித்துச்சொல்லப்பட வேண்டியது.

"உண்மையும், தர்மமுமே எமது பலம்" எனக்கொண்ட தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள், ஒடுக்குமுறைக்கெதிராக எழுந்த தமிழ்மக்களின் வெற்றியாக புத்தாயிரமாண்டின் முதல்வெற்றியை ஆக்கியதன் மூலம், இந்த ஆயிரமாம் ஆண்டை, ஆக்கிரமிப்புக்கள் அழிந்த விடுதலையின் வெற்றியாண்டாகத் தொடக்கிவைத்தார். O



களமிருந்து மீளும் காயமுற்ற புலிகள்.



www.eelamview.com

www.eelamview.com



# வீர விருட்சத்தின் வித்துக்கள்

## பதிந்த தடம்

கார்த்திகை மாதத்து ஊதல்காற்று உடலைச் சில்லிடச் செய்து கடந்து சென்றது. இரண்டாம் கட்ட ஈழப்போர் உக்கிர கட்டத்தை அடைந்திருந்தது. பலாலி இராணுவத்தளத்தை விரிவுபடுத்தி யாழ் நகரை கைப்பற்றிவிட எதிரி முனைந்துகொண்டிருந்தான்.

24.11.1992, பத்தமேனிப்பகுதியில் எதிரி புதிதாக அமைத்திருந்த முன்னணிக்காவலரண்களை ஊடுருவித்தாக்கி அழித்துவிடும் நோக்கில் எமது அணிகள் நகர்ந்துகொண்டிருந்தன. மரபு ரீதியில் முன்னேறி வந்து நிலையமைத்துள்ள இராணுவத்தை தாக்கி அழிப்பதற்கு மோட்டார் பீரங்கிகளின் ஆதரவு கூட எம்மிடம் இல்லாத காலமது. சாதாரண தானியங்கி துப்பாக்கிகளையும், இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்டு எதிரியைத்தாக்கி அழிக்க வேண்டியிருந்தது எனினும் அன்றைய போர்ச்சூழல் அவ்வாறானதொரு சண்டையைச் செய்ய எம்மை நிர்ப்பந்தித்தது..

நேரம் நள்ளிரவைத்தாண்டியிருந்தது. அந்த மழைக்காலத்து இருளின் ஊடு சில உருவங்கள் குனிந்தவாறும், தவழ்ந்தவாறும் எதிரியின் முன்னணி காவலரண்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தன. பல அணிகள் பங்கெடுத்த அந்தச்சண்டையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தாக்கிக்கைப்பற்றும் பொறுப்பு பெண்கள் படையணிப் போராளிகளிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

அவர்கள் எதிரியின் முன்னணித் தடையை நெருங்கியிருந்தனர். தேடொளி விளக்குகள் உமிழ்ந்த வெளிச்சம் நிலத்துடன் நிலமாக தடைகளின் அருகில் கிடந்தவர்களின் தலைகளின் மேலால் ஒளி பாய்ச்சிச் சென்றது. இடைக்கிடை எதிரி தன்னிடமுள்ள கனரக ஆயுதங்களினால் தனக்கு முன்னால் உள்ள தடைப்பிரதேசத்தினுள் எழுந்தமானமாக சுட்டுக்கொண்டிருந்தான். அவன் ஏவிய எறிகணைகளும் ஆங்காங்கே விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

முட்கம்பி வேலி, தடைகளை வெட்டியவாறு அந்த அணியினர் ஒருவர் பின் ஒருவராக கைகளில் இறுகப்பற்றிய துப்பாக்கிகளுடன் எதிரி முதலாவதாக ஏற்படுத்தி வைத்திருந்த தடையை தாண்டினர். டோப்பிட்டோ குண்டுடன் அவர்களின் முன்சென்ற போராளி அடுத்திருந்த தடையை நோக்கி ஊர்ந்துகொண்டிருந்தாள். இடைக்கிடை எதிரி ஏவும் எறிகணைகள் விழ்ந்து வெடிக்கும் சத்தத்தைத்தவிர எல்லாம் அமைதியாக இருந்தது. சண்டை தொடங்குவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன. எதிரியைத்தாக்கி உள் நுழைவதற்கான பாதை ஏற்படுவதற்காய் அணியினர் காத்திருந்தனர்.

எழுந்தமானமாக எதிரி ஏவிய எறிகணையொன்று வெடித்து ஓய்ந்தபோது அணியில் ஒருவளாக அங்கே நிலையெடுத்திருந்த 02ம் லெப். ஜெமிலாவின் கால்கள் இரண்டையும் அது சிதைத்திருந்தது.

எல்லோருடைய விழிகளும் தவிப்புடன் அவளை நோக்கித் திரும்பின. அவளது வேதனையின் முனகலால் அடுத்து நடக்கவிருக்கும் விபரீதத்தை எண்ணி எல்லோர் முகங்களிலும் அச்சத்தின் சாயல் படர்ந்தது. முதலுதவி செய்வதற்காய் ஜெமிலாவின் அருகிலிருந்த போராளி அவளை நெருங்கியபோது அவளுடைய முகம் உணர்ச்சியற்று கல்லாக இறுகியிருந்தது, ஆனால் அந்த விழிகளில் மட்டும் ஏதோ ஒரு ஆத்ம ஒளி பரவியிருந்தது.

**- அன்பு -**

மெல்ல அசைந்த அவள் உதடுகளில் இருந்து அந்த வார்த்தைகள் வெளிவந்த போது யாருமே அதை எதிர்பார்க்கவில்லை.

" என்னை விட்டிட்டு நீங்கள் முன்னேறுங்கோ. நான் சத்தம் போட மாட்டன் " இறுதியாக இவள் கூறியதுபோலவே அந்தச் சண்டை தொடங்கும்வரை, ஏன் அவள் மருத்துவ விடுதியை அடையும்வரை அவளுடைய நாவு வேதனையில் ஒலியெழுப்பவேயில்லை.

எதிரியின் காவலரண் தொடரின் மிக அருகில் சிறு முனகல் சத்தம்கூட அங்கே நிலவிய நிசப்தத்தைக்குலைத்து எதிரியை உசாரடையச்செய்துவிடும் வேளையில், இன்னும் எதிரியை தாக்க சில நிமிடங்களே உள்ள இறுதி கணத்திலே தனது அணி எதிரியால் அவதானிக்கப்படக்கூடாது, தன்னால் அன்றைய சண்டை சூழம் பிவிடக்கூடாது, என்பதற்காய் தன் அத்தனை வேதனை உணர்வுகளையும் அவள் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டாள்.

ஒரு போராளி என்ற வகையில் தனது வேதனையின் வெளிப்பாடுகளை தனக்குள்ளே அடக்கி, உயரிய மன உறுதியை, தியாகத்தை வெளிப்படுத்துவது என்பதற்கும் அப்பால் எவ்வாறு அந்தப்பெண்ணால் தன்னிலை மறந்து வேதனையில் மயக்கமடையும் போதும் கூட, தன் வேதனை உணர்வுகளை தனக்குள்ளேயே அடக்கி அமைதிகாக்க முடிந்தது? சாதாரண மனித உயிர்களினால் செய்ய சாத்தியமற்ற அந்தச் செயல் எவ்வாறு அவளிற்கு சாத்தியமாயிற்று?

எதிரியைத் திகைப்பிலாழ்த்திய அந்தச் சமரின் வெற்றியை சாத்தியமாக்கியது, வெற்றிக்காய் வேதனைகளை தாங்கியவாறு பின்னர் மௌனித்துவிட்ட அவளின் நெஞ்சுறுதியே. O

மணலாற்று மண்ணில் எதிரி ஏற்படுத்தியிருந்த ஆக்கிரமிப்பு வடிவங்களிற்கு அரணமைந்து நின்றது, கொக்குத்தொடுவாய் இராணுவத்தளம். எங்கள் மக்கள் வாழ்ந்த நிலத்திலிருந்து அவர்களை இடம்பெயரவைத்துவிட்டு, அத்துமீறிக் குடியேறியவர்களின் ஆக்கிரமிப்பின் சாட்சியமாய் இறுமாந்திருந்தது அந்த முகாம்.

28.07.1995 நள்ளிரவு நேரம் எதிரியின் அந்த முகாமை நோக்கி இருளில் கரைந்தவாறு அணியணியாகப் போராளிகள் நகர்ந்துகொண்டிருந்தனர். உயர்ந்த மரங்களினூடு 'ஊ' என்ற இரைச்சலிட்டு வீசிய காற்று அச்சப்பட வைத்தவாறு அவர்களைக் கடந்து சென்றது.

அது ஒரு தாக்குதலிற்கான நகர்வு. அடர்ந்த காடுகளினூடு முன்னேறிக் கொண்டிருந்தவர்கள் எதிரியின் முகாமை நெருங்கியிருந்தனர். எதிரியின் முகாமைச் சுற்றிப் பல முனைகளில் நெருங்கிக்கொண்டிருந்த அணிகளில் ஒரு அணியாகத்தான் பெண்கள் படையணியின் அந்த குறிப்பிட்ட அணியையும் ஒரு வேவுப்புலி வழிகாட்டி நகர்த்திக்கொண்டிருந்தான்.

தாக்குதல் ஆரம்பமாவதற்குரிய நேரம் நெருங்கியிருந்தது. அவர்கள் தமது தளப்பிரதேசத்தில் இருந்து கணிசமானளவு தூரம் முன்னேறியிருந்தனர். எதிரியின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள்கூட அவனது கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வெற்றிகரமாக நகர்ந்து அவனது தடைவரை அண்மித்திருந்தனர். எதிரி தனது முகாமைச் சுற்றி மின் விளக்குகளைப் பொருத்தியிருந்தான். இரவைப் பகலாக்கிக்கொண்டிருந்த அந்த மின் விளக்குகளினூடு அவர்கள் தொடர்ந்தும் முன்னேறவேண்டியிருந்தது அதனால் இப்போது எதிரியால் தெளிவாக அவதானிக்கப்படக் கூடிய நிலையிலிருந்தனர்.



முகாமைச்சுற்றியுள்ள தடைகளை அகற்றி முகாமினுள் நுழைவதற்குத் தேவையான பாதையை ஏற்படுத்துவதற்காய் போராளிகள் சிலர் முட்கம்பிச் சுருள்களினூடு: 'டோப்பிட்டோ' குண்டை பொருத்திவிட்டு சண்டை தொடங்கும் இறுதி நேரம்வரை காத்திருந்தனர்.

சண்டை தொடங்கிவிட்டது. முதலாவது தடையை தகர்த்துவிட்டு லெப். மேனகாவின் அணி இரண்டாவது தடையைத்தகர்க்க முயன்றது. அவர்கள் வைத்த 'டோப்பிட்டோ' குண்டு வெடிக்காமல் அவர்களை ஏமாற்றிவிட தொடர்ந்தும் முன்னேற முடியாதவாறு சண்டையிட்டுக்கொண்டிருந்த அணி மீது எதிரி தாக்குதலைத் தீவிரப்படுத்தினான்.

எதிரியை வீழ்த்தியவாறு முன்னேற வேண்டியவர்கள் எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருவராய் தம்மை இழந்துகொண்டிருந்தார்கள். மாற்று வழிகள் ஏதும் உடனடியாகச் செயற்படுத்த முடியாத அளவிற்கு எதிரி அவர்களை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான். நிலமை அங்கே மோசமாகிக்கொண்டிருந்தது.

சொற்ப நேரம் எதிரிக்கு கிடைக்கும் சாதக நிலமைகூட அங்கே எமது மேலாண்மையை தகர்க்கப் போதுமாய் அமைந்துவிடும் என்பதை உணர்ந்திருந்த லெப். மேனகா தனியொருத்தியாய் நிலமையை மாற்றியமைக்கத் துணிந்தாள்.

எதிரி வானில் ஏவிய பராவெளிச்சக்குண்டுகள் ஒளிவீசிக்கொண்டிருந்தன. இன்னும் தகர்க்கப்படாமல் அவர்களின முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கும் முட்கம்பிச்சுருள, பரா வெளிச்சத்தில் மின்னிக்கொண்டிருந்தது. ஒரு விடுதலைப் போராளி சமர்க்களங்களில் தன் அதீத வீரத்தை வெளிப்படுத்துவது இயல்பு. ஆனால அவள தன் முயற்சிக்காய் உயிரையும் பொருட்படுத்தாது, உடலின் ஒவ்வொரு உயிர் அணுக்களும்; அடையப்போகும் வேதனையை அறிந்திருந்தும் அசாத்தியமான அந்தச் செயலைச் செய்தாள்.

அந்தப் பகுதியில் இருந்த எதிரியின் துப்பாக்கிகள் எல்லாம் அவர்களின் மீதே மையம் கொண்டிருந்தது. சடசடக்கும் எதிரியின் துப்பாக்கி ரவைகளினூடு உடலிலிருந்து குருதி கொப்பளிக்க ஓடிச்சென்று முட்கம்பிச்சுருள் மீது பாய்ந்தாள். இதுவரையும் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து தடையாக நின்ற கம்பிச்சுருள் நிலத்தோடு நிலமாக நசுங்கிப் போயிற்று. அவளின் உடலின் மேலால் அணிக்கு ஒரு பாதை பிறந்தது. நசுங்கிக்கிடந்த கம்பிகளின் மேலால் அவள் தன் உயிர் கொண்டு உருவாக்கிய பாதையின் ஊடாக அவளைக் கடந்து அவளது தோழிகள் முகாமினுள் பாய்ந்தனர். O



www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலி மேஜர் ஆதித்தன்

## கரும்புலி
## மேஜர் ஆதித்தன்
### முனியாண்டி சுதாகரன்
### பதுளை மாவட்டம்

வீரமலர்வு - 28 - 08 - 1978

வீரஉதிர்வு - 25 - 12 - 1999

**வீரப் போரிற்கு தோள்கொடுத்த களங்கள்:-**

☆ 27 - 03 - 1997ல் புல்மோட்டை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித் தாக்குதல்.

☆ 5 - 11 - 1997ல் மொறவேவா பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல்.

☆ 09 - 08 - 1997 குச்சவெளி பகுதியில் இராணுவ ரோந்து அணிமீதான தாக்குதல்.

☆ 11 - 10 - 1997 மன்னார், முருங்கன் இராணுவ முகாம்மீது மேற்கொளளப்பட்ட மோட்டார் தாக்குதல்.

☆ 23 - 12 - 1997 பரந்தனிற்கும் கரடிப் போக்குச் சந்தியிற்கும் இடையில் இராணுவ அணிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதல்.

☆ 09-01-1997 ஆனையிறவு, பரந்தன் இராணுவ தளங்கள் மீதான அழித் தொழிப்பு தாக்குதல்.

☆ 1997 - 1998ல் கரும்புலிகள் அணியிற்கு வரும்வரை ஜயசிக்குறுய் எதிர்ச்சமரில் 82. M.M. மோட்டாரானனாக தாக்குதலில் ஈடுபட்டது.
கரும்புலிகள் அணியில் இணைந்தபின் ஓயாத அலைகள் - 3ல்

☆ மணலாற்றுப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட சிறப்பு நடவடிக்கை.

☆ யாழ்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புநடவடிக்கை.

நிதானித்துக் கொள்வதற்கிடையில் அந்த நிகழ்வு அவர்களை நிலைகுலையச் செய்துவிட்டது.

கைகளால் தொடுகின்ற தூரத்திற்குள் கடுமையான துப்பாக்கிச் சூடுகள், எதிர்பார்த்தது தான்; என்றாலும் இவ்வளவு சீக்கிரத்தில் நடக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. இராணுவ முகாம்நோக்கி நகர்ந்துகொண்டிருந்த போது முகாமிற்கு அருகே பதுங்கியிருந்த இராணுவம்தான் தாக்குதலை ஆரம்பித்தது அந்தத் தாக்குதல், இமைப்பொழுதில் அவனோடு கூடவந்தவர்களைப் பிரித்துவிட அவன் தனித்தவனானான்.

எங்கும் கடும் இருட்டு. இருளிற்குள் இருந்து பெரிய உருவம் ஒன்று பாய்ந்து அவனைக் கட்டிப்பிடித்தது. அவனைவிட பெரிய உருவம் அது இரண்டு கைகளாலும் அவனை நசுக்கி விடுவது போல் அழுத்திப்பிடித்தது.

மின்னல் வேகத் தாக்குதல், என்றாலும் நிதானித்துக்கொண்டான் பறிக்க முயற்சித்தான. முடியவில்லை. மூச்சுத்திணறியது. அவனைப் பிடித்திருப்பது இராணுவ வீரன. அவன் பெருங்குரல் கொண்டு உதவிக்கு ஆட்களை அழைத்தான்.

'' சிறீல்ல்... சிறீல்ல் ...'' நிலமை மோசமாவது தெரிந்தது. புயல்வேகத்தில் தனது காலால் அந்த ஆமிக்காரனின் காலைப் பலமாய் உதைத்தான். சிறிய தளர்வு. அதை சாதகமாக்கி கைகளின் பிடிக்குள் இருந்து விலகிக்கொண்டான். அவன் வைத்திருந்த ஆயுதம் 203 ( டொங்கான் ) குறுகிய தூரத்திற்குள் சுடமுடியாது. எட்ட நின்று சுடுவதற்கு நேர அவகாசமில்லை. எதிரி நிதானிக்க முன் தனது ஆயுதத்தால் ஓங்கி ஓர் அடி போட்டான்.

எதிரி சற்று நிதானமிழந்து நின்றான். மீண்டும் முகத்தில் பலமான அடி. கடைசியாய் தனது பலம் முழுவதையும் கைகளில் திரட்டி கன்னத்தில் போட்டான் ஒருபோடு அதற்குப் பின் ஆமிக்காரன் நிமிர்ந்து நிற்கவேயில்லை.

**- துளசிச்செல்வன் -**

'' அம்மே '' என்று அடிவயிற்றில் அலறிய படி நிலத்தில் தொப்பென்று சாய்ந்தான். அவனுக்கு முகமெல்லாம் வியர்த்து உடல் தொப்பமாய் நனைந்துவிட்டது. நின்று பார்க்க நேரமில்லை. கத்திய சத்தம் கேட்ட திசைக்கு இராணுவம் தேடி வரும் சப்பாத்துச் சத்தங்கள் கேட்டது. கீழே விழுந்துவிட்ட ' ஷெல் ' லினை எடுத்துக்கொண்டு மறைவான இடத்திற்கு ஓடினான். நேரங்கழித்து அந்த இடமெல்லாம் இராணுவ நடமாட்டங்கள் அடங்கிப்போனது. அவன் தனித்த ஒருவனாக நின்றாலும் தோழர்களின் நினைவு நெஞ்சைக் கனமாக்கியது.

' காயப்பட்டு விழ்ந்து கிடப்பார்களோ இல்லை வீரச்சாவடைந்திருப்பார்களோ' தனக்குள் எண்ணியபடி அவன் அந்த இடமெங்கும் தேடத் தொடங்கினான். சுற்றுப் புறமெங்கும் தேடினான். ஒவ்வொரு பற்றை மறைவுகளையும் தேடினான். எங்குமே காணவில்லை. காலை விடியப்போகின்றது என்பதால் முகாமில் இருந்து சற்றுத் தள்ளிவந்து நிலையெடுத்தான்.

விடிந்த பின்புதான் தோழர்களோடு சேர்ந்து கொண்டான். எவருக்குமே ஒருவித இழப்புக்களும் இல்லை.

காலையில் அவனைக் கண்டதும் போராளிகள் ஆச்சரியப்பட்டுக்கொண்டார்கள். அவனின் ஆயுதத்தில் சின்ன தசைத்துண்டு ஒன்று ஒட்டிக்கொண்டிருந்தது. எவருக்கும் அது புரியவில்லை; புருவங்களை உயர்த்தினார்கள். ஆனால் அவனுக்குத் தெரியும். அவன் சிரித்தான்.

'' இதுதான் இராத்திரி என்னை உயிரோட பிடிக்க வந்தவன்ர கன்னம் '' இதற்குப்பின் தான் எல்லோரும் சிரித்தார்கள். அவர்களின் விழி அவனின் வீரத்தைப் பாராட்டியது.

ஆதித்தன் .. அவனுடைய வீட்டு வாழ்க்கை, சோகங்களை தனக்கு சொந்தங்களாக்கிக்கொண்ட பயணம். அவன் தன்ர வாழ்க்கையைச் சொல்ல ஆரம்பித்தால் வார்த்தைகளே ஈரமாகும்.

✤ ✤ ✤

அவனது உறவின் வட்டம் மிகச்சிறிது. எலும்பும் தோலுமாய்ப் போனாலும் உடலில் இருந்து பிரியத்துடிக்கின்ற உயிரை பிள்ளைகளின் வாழ்க்கைக்காக இழுத்து வைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் அவனின் அம்மா. தனக்கென ஒருகுடும்பத்தை உருவாக்கி வீட்டில் இருந்து பிரிந்துபோன மூத்தஅண்ணன் ஒருவன அதைவிட அவனுக்கு சின்ன அண்ணன் என்றொரு உறவு. அவ்வளவு தான். சின்ன வயதிலேயே அப்பாவை மரணத்திடம் பறிகொடுத்துவிட்டான். எஸ்ரேட் வாழ்க்கை, அம்மாவின் இயந்திரத்தனமான உழைப்பு இவையெல்லாம் சின்ன வயதிலிருந்து அவனுக்கு மனக்காயங்களை ஏற்படுத்திய விடயங்கள; காலையில் பனிப்புகார் கலையமுதல் எழுந்து, பள்ளிக்கூடம் போகின்ற பிள்ளைகளிற்காக ரொட்டி சுட்டு வைத்துவிட்டு அழைப்பு விசில் ஊத அவசரம் அவசரமாகக் கூடையைத் தூக்கிக்கொண்டு தோட்டம் போகின்ற அம்மா சாயந்தாரம்தான் வீடு வருவாள். வீட்டை வருகின்ற நேரம் அட்டை கடித்து காலெல்லாம் இரத்தம் கசிந்துகொண்டிருக்கும். ஆனாலும் அம்மா சொல்லுவாள் '' நீங்கள் வளர்ந்து பெரிய மனுசன்களாய் எங்கயாச்சும் நல்லா இருக்கனும் '' அதுக்காகத் தானே அவள் இவ்வளவு கஸ்ரங்களையும் அனுபவித்து அந்த வாழ்க்கையைச் சுமந்து கொண்டிருக்கிறாள. அன்றொருநாள் காலையில் அழைப்பு விசில் முதல்முறை ஊதி இரண்டாம் முறை ஊதிய பின்பும் அம்மா பாயைவிட்டு எழுந்திருக்கவில்லை. அன்று அவளை நோய் பாயிலேயே சிறைவைத்தது. அன்றிலிருந்து அவள் எழுந்து நடமாடக்கூட முடியாதவளாகி விட்டாள்.

''சின்னண்ணாடேய் அம்மாவுக்கு வருத்தமாமடா மருந்தெடுக்கிறதென்டா ஆயிரம் ரூபா காசு தேவை'' சின்ன வயதிலேயே அம்மாவை மரணத்திடம் பறிகொடுத்துவிடாது காப்பாற்றி விட வேண்டும் என்ற துடிப்பு அவனுக்குள் ஊறிக்கொண்டது. அம்மாவைக் காப்பாற்றுவது என்றால் பணம் தேவை. பணத்திற்கு என்ன செய்வது! இரண்டு பேருக்குமே வழி தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்தது ஒரே ஒரு வழிதான். படிப்பை நிறுத்தி எங்கையாவது வேலையில் சேர்ந்து கொள்ளுவது. அண்ணன் எங்கோபோய் ஒரு வேலையில் சேர்ந்து கொண்டான். இவனையும் இவனது உறவுக்காரர் கொழும்பில் ஒரு பலசரக்குக் கடையில் சேர்த்து விட்டார்.



பள்ளி வயதிலேயே அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் கடையிலேயே வேலைசெய்யத் தொடங்கினான். முதலில் கடையில் வேலை செய்பவர்களுக்கு தேனீர், சாப்பாடு வேண்டிக்கொடுக்கின்ற வேலை. பின், சரை கட்டுவது, பொருட்கள் நிறுப்பது, கொள்வனவுப் பொதிகள் எடுத்து வருவது, அதற்குப்பின் கணக்கெழுதுவது, வங்கியில் காசோலை வைப்புச் செய்வது என்று திறமையின் அடிப்படையில் முன்னேறி வந்தான். கொழும்பில் கடையில் நின்றபோது, பதுளையின் வாழ்க்கையைச் சற்று நினையாது இருந்தாலும் விடுமுறையில் அம்மாவைப் பார்க்க வருகின்றபோது நினைவுகள் சூடாகும்.

1983ம் ஆண்டு இனக்கலவரம் நடந்த வேளை இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு அம்மா ஓடிவந்து ஒளிஞ்சிருந்த சின்ன மரவள்ளித்தோட்டம் இதுதான். அதற்குள் அம்மா அழுத அழுகை இப்போதும் காதுகளில் பிசுபிசுத்தது. '' என்ர உயிர் போனாலும் பரவாயில்லை நீங்கள் எங்காச்சும் ஓடித் தப்பியிருங்கோ '' இந்த இடத்தில் வைத்துத் தான் அவனின் கண்முன்னால் அப்பாவை அடித்து ரக்கில இழுத்து ஏத்திக்கொண்டு போனவங்கள். இப்படி ஒவ்வொரு இடமும் அவனுக்குள் இனம்புரியாத கொதிப்பை ஏற்படுத்தியது. ஆனாலும், அவனுக்கு வழிகள் எதுவும் புரியவில்லை. அதெல்லாம் அவனுக்குள்ளேயே அடங்கிப்போனது கடைசியில் மொத்தமாக டொநட் கொள்வனவு நடக்கின்ற நாட்களில் இரவு பகல் பாராது வேலை நடக்கும். அல்லது நேரத்தோடேயே கடைக்கதவு சாத்தப்பட்டுவிடும். அன்றும் நேரத்துடன் வேலைகளெல்லாம் முடிந்து விட்டது. எல்லோரும் கூடி இருந்து வானொலி கேட்டுக்கொண்டிருந்தார்கள. அது ஓர் எதிர்பாராத நிகழ்வு.

வானொலியில் பி. பி. சி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஒலிபரப்புச் சேவை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வானொலியை யாரும் கேட்பதாக இல்லை. வேலை அசதி தீருவதற்காக எல்லோரும் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். திடீர் என அவனின் குரல் அவர்களிடமிருந்து பிரிந்து மௌனமாகிக் கொண்டது. வானொலி நிகழ்ச்சி அவனது செவிகளை ஈர்த்துக் கொண்டது.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரனை செய்தியாளர் ஆனந்தி அவர்கள் செவ்வி கண்டது ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அந்தத் தலைவன் உச்சரித்த ஒவ்வொரு வரிகளையும் கேட்டுக் கேட்டுப் →



www.eelamview.com

www.eelamview.com



பிரமித்துப் போனான். அன்றுதான் அவனுக்கு தமிழர்களுக்கென்றோர் தலைவன் இருப்பதும், இப்படிப் பெரியளவில் போராட்டம் நடப்பதும் தெரிய வந்தது. அவனின் நெஞ்சுக்குள் நம்பிக்கைப் புயலொன்று மையங்கொள்ளத் தொடங்கியது. தலைவரின் பேட்டியைக் கேட்டதிலிருந்து தனது பயணத்தின் ஒரு விடிவெள்ளியைக் கண்டுவிட்ட திருப்தி அவனுக்கு. முகம் தெரியாத அந்த தலைவன் மீது அளவு கடந்த நம்பிக்கையும், பாசமும் வைத்தான். மௌனமாய் அவனது மனதிற்குள் எத்தனையோ கோடியாண்டின் மழைவெள்ளம் ஒன்றுசேர்ந்து கரைபுரண்டது. போராட்ட ஆதரவாளர்களை அவன் கண்டுகொள்கின்ற போதிலெல்லாம் போராட்டம் பற்றியும், போராட்டத்தில் எவ்வாறு இணைந்துகொள்வது பற்றியும் கேட்டு அறிந்துவைக்கத் தொடங்கினான்.

1992ம் ஆண்டு அறிந்த தலைவனை 1994ம் ஆண்டுவரை யாருக்கும் தெரியாது நெஞ்சுக்குள் பூட்டிவைத்து நேசித்தான். 1994ம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து கொள்வது என்ற முடிவோடு கொழும்பிலிருந்து புறப்படத் தயாரானான். பதுளைக்குச் சென்று அம்மாவைப் பார்த்தான். "கொழும்பில் அடிக்கடி பிடிக்கிறாங்கள்——தெரிஞ்சவை யாழ்ப்பாணம் போகினம் அவையோட போய் இருக்கப் போறன்" என்றான். மகன் தன்னைவிட்டு நீண்டதூரம் போகிறானே என்ற ஏக்கம் அவள் கண்களைப் பெருக்கெடுக்க வைத்தது. "எங்கேயெண்டாலும் நல்லாயிருந்தாச்சரி". அந்த விடைகொடுப்பிற்குப் பின் என்றுமே அவன் அம்மாவைப் பார்த்ததில்லை. அவன் நினைத்து வந்தது போலவே யாழ்ப்பாணம் வந்ததும் இயக்கத்தில் இணைந்து கொண்டான். தலைநகர் படையணிதான் அவனை உள்வாங்கிக்கொண்டது. தலைநகர் சென்று அங்கே பல சண்டைகளிலும் பங்கெடுத்தான். பின் வன்னிக்கு வந்து 'ஜயசிக்குறு' நடவடிக்கை எதிர்ச்சமரிலும் களம் இறங்கினான். ஆனாலும், அவனது மனம் திருப்திப்படவில்லை. இந்த தேச விடுதலைக்காக அதிஉயர்வான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்ற உணர்வில் தலைவருக்கு கடிதம் வரைந்தான். "நான் கரும்புலியாப் போவதற்கு அனுமதி தாருங்கள்" கடிதம் வரைந்துவிட்டுக் காத்திருந்தான். பதில்க் கடிதம் வருவதற்குமுன் வீட்டில் இருந்தும் கடிதம் வந்திருந்தது. அம்மா அழுதழுது காகிதத்தை நனைத்திருந்தாள். "பக்கத்து வீட்டுக்காரங்க மக எங்க, மக எங்க எண்டு கேட்டு ஒரே தொல்லையாய் இருக்கு. ஒன பார்த்து கனநாளாய்ப் போச்சு ஒருக்கா வந்திட்டுப்போ மக" அம்மாவின் கடிதம் வந்த அதேதினம்தான் தலைவரிடமிருந்தும் பதில்க் கடிதம் வந்திருந்தது.

அன்றைய நாள் அவனுடைய வாழ்க்கையின் சந்திரகிரகணம் அம்மா—— போராட்டம் —— அவன் எடுத்துக்கொண்ட முடிவு?! அம்மாவின் கடிதத்தை மனசோடு வைத்துவிட்டு அவன் தனது பணிகளைத் தொடர்ந்தான். கரும்புலிகள் அணியில் இணைந்துகொண்டு இலக்குக் கிடைக்கும்வரை காத்திருந்தான். அவன் கரும்புலிகள் அணியில் இணைந்து கொள்வதற்கு முதலே எந்த நிமிசத்திலும் போராட்டத்திற்காகத் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக்கொள்ள துணிந்தவனாகவேயிருந்தான். அப்படியான நாளொன்றில் மாங்குளப் பகுதியில் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை மறித்துப்போடப்பட்ட பாதுகாப்பு அரணில் நின்றிருந்தான். அன்று காலை விடியுமுன்னே காடு கண்விழித்துக்கொண்டது. விடிகின்ற ஓசையே வெடிச்சத்தமாய்த்தானிருந்தது. முன்பக்கம் 'டாங்கி' களின் இரைச்சல், பின்பக்கம் துப்பாக்கிகளின் சடசடப்பு; சுற்றிலுமே குண்டுவெடிப்பின் அதிர்வுகள்; எல்லா வழிகளிலும் அடைக்கப்பட்ட ஒரு முற்றுகைக்குள் அவர்கள் முடக்கப்பட்டிருப்பது விடிந்தபின்புதான் தெரியவந்தது. ஆனால் அது இரவே நடந்தேறிவிட்டது. இப்போது எல்லா முனைகளிலும் வெடியதிர்வுகள் அவனின் நிலையை நெருங்கிவருவது தெரிந்தது. அவனின் பொறுப்பின் கீழ் இருந்த ஒரு 82மி. மீ மோட்டரும் ஏழு போராளிகளும், இறுக்கமான அந்த முற்றுகையை உடைத்து வெளியே வரமுடியாது என்று தெட்டத்தெளிவாக தெரிந்த பின்னும், அவன் பதட்டம் அடையவில்லை. "இருக்கிற ஷெல் முழுவதையும் அடிப்பம்" என்று கூறி நின்ற போராளிகளை திடப்படுத்தி வைத்திருந்தான். இறுதிவரையும் எதிரிக்கு இழப்பு ஏற்படுத்துவதிலேயே அவன் குறியாக இருந்தான்.

300மீ————275மீ————250மீ———. 225மீ எதிரிக்கேற்ப தூரவீச்சு மிக வேகமாக குறைந்துகொண்டுபோகப் போக அவர்களது முற்றுகை இறுகுவது தெரிந்தது. முன்புறம் நான்கு 'ராங்கி'கள் நெருக்கமாக வந்துவிட்டது என்பதை அவற்றின் ஓசைகளில் இருந்து பிரித்து அறியக்கூடியதாக இருந்தது. வைத்திருந்த ஷெல்களெல்லாம் அடித்து முடிகின்ற நிலை வந்தபோது "இரண்டு ஷெல்லை எடுத்துவை ஆமிக்காரன் கிட்டவந்தா வெடிக்க வைச்சு மோட்டரையும் எங்களையும் அழிப்பம்" எதுவித கலக்கமும் இல்லாது கூறிவிட்டு பின்வாங்குவதற்காக மரத்திலே கட்டியிருந்த 'குறோசை' ஏறி அவிழ்த்தான். "ஆயுதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு பின்வாங்கக் கூடியமாதிரி இருங்கோ" என்று கூறிவிட்டு வெளியில் நிலமையைக் கவனித்தான். இராணுவம் மிகவும் நெருக்கமாக வந்துவிட்டது. ஒவ்வொரு இராணுவ வீரனையுமே கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. இராணுவத்தின் செறிவு எங்கு குறைவாக உள்ளதோ அந்தப் பகுதியைக் கவனித்து அந்தப்பகுதியூடாக, இருந்த துப்பாக்கிகளை வைத்து தாக்குதலை நடத்தி பின்வாங்கினான். அவனுடன் நின்றவர்களுக்கோ அல்லது ஆயுதத்திற்கோ சேதம் இல்லை என்றாலும் பெரும் சிரமத்தின் பின்தான் எமது தற்காலிக நிலையை வந்தடைந்தனர். அதற்குப்பின்தான் அவன் கரும்புலியாய் இணைந்துகொண்டான். கரும்புலியாய் இணைந்து அவனுக்கு முதலில் கிடைத்த இலக்கு மணலாற்றுப் பகுதியில் இருந்தது. அந்த இலக்கை அழிக்க பயிற்சி எடுத்து ஓய்வாக தேனீரோ 'உலருணவோ உண்ணுகின்ற வேளை இப்படித்தான் சொல்லுவான். "நான் காயப்பட்டாலும்நினைவு இழக்கிறவரை தவண்டு தவண்டெண்டாலும் என்ர பணியை நிறைவேற்றுவன்"

அந்த தாக்குதலுக்கு அவன் PK இயந்திரத் துப்பாக்கிதான் கொண்டு போகவிருந்தான்.

"இதுதான் அண்ணை எதிர்பார்க்கிறதைச் செய்து முடிக்கப்போறது" என்று அன்பாக தூசி துடைத்து மூடிவைப்பான் தனது ஆயுதத்தை. ஆனால் அந்த இலக்குத் திட்டத்தின்படி தாக்க வேண்டிய தேவை இல்லாமையினால் அவன் வேறு வேலைத்திட்டமாக அதே பிரதேசத்திற்குள் அனுப்பப்பட்டான். அதை நிறைவேற்ற வந்தவனிற்கு யாழ் மாவட்டத்திற்குள் ஓர் இலக்கு வந்தது. அதை அழிக்கச் சென்ற வேளைதான் இராணுவத்திடம் பிடிபட நேர்ந்தது. கையால் அடித்துவிட்டுத் தப்பி வந்திருந்தான். என்றாலும், அங்கே அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்த பணிகள் அனைத்தையுமே செய்து முடித்திருந்தான். "அண்ணை நிறைய எதிர்பார்க்கிறார் அண்ணையின்ர எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும்"

என்றுதான் எப்போதும் அவன் உதடுகள் உச்சரிக்கும். ஆனையிறவுக்குள் தாக்குதல் நடாத்துவதற்காக அணிகள் பிரிக்கப்பட்டபோது காய்ச்சல் காரணமாக இவனை அந்த அணிகளுடன் சேர்த்துக்கொள்ளவில்லை. அந்த அணிகளோடு தானும் போகவேணும் என்று எவ்வளவு பாடுபட்டுக் கேட்டான். என்றாலும், அவன் அந்தத் தாக்குதலுக்கு அனுமதிக்கப்படவில்லை. சரியான மனக்கவலையோடு காத்திருந்தான். அதுக்கான சந்தர்ப்பம் மிக விரைவிலேயே கிடைத்தது. வேறு முனையொன்றில் தாக்குதல் தொடுக்கவேண்டியிருந்ததினால் அவசரமாக கரும்புலிகள் அணி தயார்ப்படுத்தப்பட்டபோது அந்த அணிகளோடு ஆதித்தனும் சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

அணிகள் புறப்படுவதற்கு தயாராக நின்ற இறுதிக்கணம், சிரித்துச் சிரித்து கையசைத்து எல்லோருக்கும் விடைகொடுத்துக்கொண்டிருந்தான். போகின்ற நேரம் இதைத்தான் சொல்லிவிட்டுப் போனான். "அண்ணை எங்களுக்கு போகச்சொல்லி விடைகொடுத்தநேரம், அண்ணையின்ர முகம் வாடிப்போய் இருந்திச்சுது அதை நினைக்க இப்பவும் மனசுக்க வேதனையாக் கிடக்குது. மிக விரைவிலேயே அண்ணையின்ர காலத்திலேயே தமிழீழம் மலரும் அதைப் பார்த்து அண்ணை சிரிக்கேக்கைதான் என்ர மனம் ஆறுதலடையும்" சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

போனவர்கள் என்ன செய்தி சொல்லுவார்கள் என காத்திருந்தவர்களுக்கு வந்த செய்தியோ இதயங்களிற்குள் இடியைச் சொரிந்தது. வானம் தலையைத் தொட்டுவிட்டது போன்ற உணர்வு. ஓயாத அலைகள் மூன்றிற்கு இந்தத் தேசம் கொடுத்த பெருவிலைகளுள் ஒன்றாய் ஆதித்தனும் போய்விட்டான். என்றாலும் என்றைக்கும் அவன் நினைவினைச் சுமந்தபடியே இந்த தேசம் சுவாசித்துக் கொள்ளும். O

( 07ஆம் பக்கத்தொடர்ச்சி )

## சந்திரிகாவிற்கு... ..

இரங்கத்தக்க வகையில் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதன் மூலம் உங்கள் முதற் கூற்றோடு முரண்படுகின்றீர்கள். நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேசப்போகின்றீர்களா, இல்லையா என்பது குறித்து நீண்ட காலத்திற்கு நழுவல் போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளீர்கள். இறுதியாக நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றி பேசத் தயாரா, இல்லையா எனக் கூறுவதே அரசியல் முதிர்ச்சியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதே உங்கள் உண்மையான நிலைப்பாடெனின் அவர்கள் குறித்து "தமிழீழ விடுதலைப் புலிக் கோழைகள், பயங்கரவாதக் கோழைகள" என்ற உங்கள் ஆத்திர வெடிப்புக்களும் புலிகளை அழிப்பதற்கான உங்கள் தூண்டுதலும் எதற்காக! இவை நிச்சயமாக எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

நீங்கள் இத்தீவில் வாழ்முறையாகிவிட்ட "அச்சம் சாவோடு கூடிய பண்பாட்டை இல்லாது செய்ய" எல்லா வழிகளிலும் முயலவும். இப்பண்பாட்டினை 1956ம் ஆண்டு யூன் திங்களில் சிங்களவர்களே முதலில் தொடக்கி வைத்தார்கள் இதனைச் செய்வதற்கு விடுதலைப் புலிகளை நெருங்குவதற்கு முதல் உங்கள் வீட்டு வாசலில் இருந்தே இப்பணியைத் தொடங்க வேண்டும் என்பதனை இத்தீவிலுள்ள எல்லோரும் உணர்ந்துள்ளதைப் போல நீங்களும் உடனடியாக உணர்ந்து கொள்வீர்கள் என நினைக்கிறேன்.

அமைதியை நிலை நாட்டுவேன் என்ற உங்கள் தொடர்ச்சியான கூற்று குறித்து கீழ்க் காண்பவற்றைக் கூறி என் கடிதத்தை முடிக்கலாம் என நினைக்கின்றேன். நீங்கள் உங்கள் பொதிகள் ஒன்றின் மூலம் அமைதியை ஏற்படுத்தலாம் என நம்பினால் அதனை மறந்து விடுங்கள் உங்கள் மீதோ அல்லது உங்கள் அமைதிப் பொதிகள் மீதோ ஆர்வம் இல்லை எனத் தமிழர்கள் தெளிவாகக் கூறிவிட்டனர்.

உண்மையில் தமிழர்கள் தன்மானம் மிக்கவர்களாயின் அவர்களுக்கு உங்களால் அல்லது உங்களது எதிர்த்தரப்பினரால் பகிர்ந்தளிக்கப்படுவது எதுவும் தேவைப்படாது. நாங்கள் ஏன் பெறவேண்டும்? தமிழர்களாகிய நாங்கள் சிங்களவர்களின் "பரக்கமனப்பான்மையிலோ" அல்லது அவர்கள் தெரிவு செய்து பகிர்ந்தளிக்கப் போவதிலோ தங்கியிருக்கப் பிறக்கவில்லை. இத்தீவின் ஒரு பகுதியானது சிங்களவர்களுக்கு உரிமையானது அதேபோல் மறுபகுதியானது தமிழர்களுக்கு உரிமையானது என்பதை சிங்களவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழர்கள் மறுபுறத்தில் தமது தேசம் என்ற வேணவாவானது தன்னாட்சி உரிமையைக் கொண்டுள்ளது என்பதையும் அந்த உரிமையானது அவர்களது பிறப்புரிமை என்பதால் அதனை மாற்றிக்கொடுக்க முடியாது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்களுக்கு தமது இந்த உரிமையை பயன்படுத்தி அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான அரசியல் அறிவும், வலிமையும், புத்தியும் இருக்கவேண்டும். தமிழர்கள் நீண்டகாலமாக அமைதிப் பொதிகள், பேச்சுவார்த்தைகளை எதிர்பார்த்தும் சிங்களவர்களால் எதுவும் பகிர்ந்தளிக்கப்படுமா என எதிர்ப்பார்த்தும் காத்து இருக்கின்றார்கள். இப் பிச்சை எடுக்கும் மனநிலை மாற வேண்டும். எவ்வளவு விரைவில் இது மாறுகின்றதோ அவ்வளவுக்கு தமிழர்களுக்கு நல்லதாகும்.

தமிழ்த் தேசமானது தனது உரிமைப் பேராளர் குழு மூலம் 1985ம் ஆண்டு தனது வேணவாவை உலகறிய அறிவித்தது. அந்நிலையில் இருந்து பின்வாங்குதல் என்பது இன்னும் பிறவாத தமிழர்களின் உரிமையை விட்டுக் கொடுப்பதற்கு ஒப்பாகும். எதிர்காலத் தலைமுறையினரின் உரிமையை விட்டுக்கொடுக்க தற்காலத் தலைமுறையினருக்கு உரிமை கிடையாது. தமிழர்கள் தமது வேணவாவில் தீவிரமாக இல்லை. அவர்கள் தமது உரிமைக் கோரிக்கையை தளர்த்தத் தயாராக இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தை சிங்களவர்களிடம் ஏற்படுத்தச் செய்யும் எச்சமிக்ஞையும் துரோகத்தனமான செயற்பாடாகும். இன்றைய தலைமுறையினர் இவ்வகையான துரோகத்தைப் பொறுக்கமாட்டார்கள். அத்துடன் துரோகிகளுக்கு இரக்கம் காட்டவும் மாட்டார்கள்.

நான் இதுவரை கூறியவற்றின் அடிப்படையில் கீழ்க்காணுபவற்றை சொல்லி முடிக்கின்றேன். நான் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை, மூன்றாம் அணியின் தலையீடு போன்ற பேச்சுக்களால் களைத்துப் போயும், வெறுப்பும் அடைந்துள்ளேன் அதேவேளை நான் ஆராய்ந்து கண்ட மெய்மையானது தமிழ்மக்களின் சிக்கலுக்கான அரசியல் தீர்வை தமிழ் மக்களே காணவேண்டும். என்பதுதான்; இதனை அவர்களால் மட்டுமே காணமுடியும். சிங்களவர்களும் தமிழர்களும் அவர்களுக்குரிய நிலப்பரப்பில் ஒருவரால் ஒருவர் கட்டுப்படுத்தப்படாத நிலையில் தம் பணிகளில் ஈடுபடுவதன் மூலமே இத்தீவில் அமைதியாக தொடர்ந்து வாழமுடியும் நீங்கள் உங்கள் பேச்சில் அமைதி குறித்துக் கூறிய மேற்கோள்களுக்கு பொருத்தமானதாக இவ்வகையான ஒழுங்கமைப்பே இருக்க முடியும்.

"அமைதி என்பது ஒரு சமர்

அமைதியானது இலவசமாகக் கிடைப்பதும் இல்லை முயன்று பெறப்படுவதுமில்லை.

அது வீரத்தாலும் ஒருவர் மேல் ஒருவருக்கு உள்ள மதிப்பாலும் வெல்லப்படுவதாகும்.

அது ஒவ்வொருவரிடமிருந்தும் விழிப்புணர்வையும் ஒப்படைப்பையும் வேண்டுகின்றது.

அமைதியானது வல்லமை மிக்கோரால் திணிக்கப்படும் சட்டமல்ல. அது எல்லா மக்களினதும் சமநிலை, மதிப்பு ஆகியவற்றிலேயே உருவாக்கப் பட்டதாகும்." O

- ஐலண்ட் 07. 02. 2000 -



www.eelamview.com

www.eelamview.com



# இனிவரும் நாட்கள் எமக்கானவை

பனைமரமே! நீ நலமா?
பக்கத்தே இளை பரத்தி
நிழல் விழுத்தி நிற்கும் பூவரசும் சுகம்தானா?
வளவெங்கும் பூத்து வாசலிலும் பூச்சொரியும்
வேப்பமரம் சுகமா?
விடிபொழுதில் வந்திறங்கும்
காக்கை நலமா?
கரிக்குருவி;
புலுனி,
புறா,
யாவும் சுகம்தானா?
நானிருந்த போது வந்து
கூவும் குயில் நலமா? கூரையிலே கூடுகட்டி
கன்னற் குரலாலென் காதினிலே தேன்சொரிந்த
வண்ணக் குருவியின்னும் வாழ்கிறதா என்வீட்டில்?
எல்லாம் உளதா? ஏத்தனும் குறைகிறதா?
வதையுண்டு போகும் வாழ்வாமே;
சிலையழகு
சிதையுண்டு போகச் சிறையாமே,
ஊர்முழுதும் முள்ளாம்;
முகமூடி முகத்தணிந்த பேயாமே.
நள்ளிரவில் கேட்கிறதாம் நாயோலம்,
நாம் திரிந்த
நெல்லுவயலெங்கும் நெரிஞ்சிப்பூ பூத்துளதாம்.
சாகும் பொழுதெந்தன் தாய்வீட்டில் சாகேனோ?
வேகும் பொழுதென்னூர் வெளிச்சுடலை வேகேனோ?
தவழ்ந்த மடிமீதும்,
தாங்கியவூர்த் தோள் மீதும்,

## உலைக்களம்

- வியாசன் -

குழந்தைப் பருவத்தே குதித்தெழுந்த மண்மீதும்
மீண்டும் உலவ மிக ஆசை;
தடைகளெலாம்;
தாண்டிவருவேன் தாய்மடியை நான்தொடுவேன்.
மணிக்கதவம் திறந்து வை.
வருகிறது ராஜகுதிரை.
வாசலில் முள்பரத்தி நிற்கும் அந்நிய சேவகனுக்கு
தொலைந்தாயெனச் சொல்லிவை.
ஊர் எல்லைவரை நகர்ந்துளது பிள்ளைகளின் தேர்.
இனி உள்ளே புகும்.
புத்தாயிரத்தின் புலரிப்பொழுது நமக்கானது.
ஏறிவந்த எதிரியை மட்டுமல்ல
எடுத்து வைத்த கவடுகளையும் சிதைத்துவிட்டு;
இறுமாப்பில் உள்ளோம் நாம்.
'' தமிழீழம் '' ஒருகனவு என்றனர் சிலர்.
ஒரு கற்பிதம் என்றனர் சிலர்.
ஈழத்தமிழர் சேவகத்துக்கே உரியர்
திமிர்ந்த செருக்குக்குத் திறனற்றோர் என்றனர் சிலர்.
பூப்பறிக்கும் கைகளில் போர்க்கருவிகளா
கூடாதென்றனர் சிலர்.
தேக்குமரக் காட்டிடையே தீக்குளியலா
பற்றியெரியப் போகுதெனப் பதறினர் சிலர்.
'' சிறுபிள்ளை வேளாண்மை '' யெனச் சீண்டினர் சிலர்.
எல்லாமே காற்றிலேறிய சருகெனக் கலைந்தன.
ஓயாதஅலை மூன்று உச்சத்தின் உச்சம்.
முகிலுரசிப் போன முகடு.
சாயாதெம் தலையெனச் சாற்றிய பட்டம்.

பாயும் புலிவீரத்தின் பாதத்துக்கு அடியில்
சாய்ந்து கிடக்கிறது பகைவனின் செருக்கு.
சந்தோஷக் காற்று தலைதடவிப் போக
செந்தூரப் பூவின் சிலிர்ப்பாய்
மந்தாரம் போட்டுளது எம்வாசல்.
புத்தாயிரப் பெண்ணே!
கலீர் கலீரென உன் காற்சிலம்பு சப்திக்க
எம் வாசலிலும் வந்து ஏறினாய்.
உலகெங்கும் உனக்கு உற்சாக வரவேற்பாம்
பூரித்தே போனாயாம்.
என்னதர இயலும் எடிமால்?
இது ஈழவாசல்;
இல்லை; இல்லை ஏழைவாசல்.
கஞ்சிக்கும் வழியற்றிருக்கும் கதவையும் தட்டினாய்
சந்தோஷம்.
குசேலரின் அவல் கொண்ட முடிச்சாய்
ஏதோபடைத்தோம் ஏற்றுக்கொண்டாய்.
1 - 1 - 2000 ஒரு சனிக்கிழமையாய் விடிந்தது;
U. N. H. C. R கூரையூடுதான் எமக்குச் சூரிய தரிசனம்.
அடுப்பேற்றாவிடினும்
பழக்க தோஷத்தால் பாத்திரம் கழுவியது கை.
சேறும் சகதியுமான தெருவில் நடந்தன கால்கள்.
நிவாரணத்துக்கும், மருந்துக்குமென
நீண்டிருந்தது வரிசை.
நீதான் என் இலக்கெனக் கூவி
தலைதடவிப் போனது எறிகணை.
குண்டு வீழ்ந்ததாய் கூறி
கொண்டுவந்தனர் சிலரைக் கூட்டியள்ளி.
நிலம் விழுங்கிகளின் கவடுபார்த்து
காவலரண்களில் விழித்திருந்தனர் பிள்ளைகள்.
வழமை போல் சாவும்,
வழமை போல் யாவும்,
வழமை போல் நாமும்,
வேறென்ன விளங்கியது எம்வாசல்?
எனினும் தளர்ந்தோமா நாம்?
இல்லை
எமக்கானவள் நீயெனும் உரிமத்தில்
உன்னை வணங்கினோம்.
புத்தாயிரப் பொன்மகளே!
இனிவரும் நாட்கள் எமக்கானவை.
காற்றெமக்குச் சாமரம் வீசும்,
கடலெமக்குக் கால்களைக் கழுவும்.
நிலவே எமக்கினி நெற்றித் திலகம்.
சூரியன் சேவகனாவான்.
வெற்றிகள் மட்டுமல்ல — விடுதலையும் எம்வாசல் வரும்.
சாமம் கழிந்து போகும் அந்தப்பொழுதே
சந்தோஷ நேரம்.
எங்கோ தூரத்தில் கேட்கும் இரவுப்பூச்சிகளின் ரீங்காரம்.
கல்லுக்கடியிலிருந்து கத்தும்
தவளையொன்றின் தனித்த குரல்.
இளை அசைய இலைகளின் கைதட்டல்.
பூவரசலாகத் தழுவும் மெல்லிய குளிர்.
எம் ஊர்முற்றத்தில் படியும் இதமான ஈரம்.
இவற்றோடு வரும் வைகறைப்பொழுதொன்றில்
விரைவில் நகரும் புலிகளின் ரதங்கள்.
எம் ஊர்களை நோக்கி.
வீதியெங்கும் நின்று விலாசம் கேட்கிறானாமே ஒருவன்.
காவலரண்களில் நின்று கையைப் பிடிக்கிறானாமே.
நள்ளிரவில் வந்து தூக்கிச் செல்கிறார்களாமே நாலுபேர்.
சொல்லி வையுங்கள்
இராஜகுதிரை புறப்பட்டு வருகிறது என்று.

☆ ☆ ☆

குன்றென நிமிர்ந்த தோளும்
குடிவழி சிறந்த வாழ்வும்
வென்றிடும் திமிர்ந்த வீறும்
வெஞ்சமர் ஆடும் தேரும்
பஞ்செனப் பகையை அள்ளிப்
பறந்திட வைக்கும் நெஞ்சும்
கொண்டவர் தமிழர் என்று
குறித்திடு புதுநூற் றாண்டே.



www.eelamview.com